''தடையைப்பற்றி யார் சொன்னது? ஆனுல் திடீ ரென்று உனக்கு இந்தக் கோணல்புத்தி வரக் காரணம் என்ன ?''

''பெரியம்மாவைப் பார்க்க அவளுக்கு ஆசை. மனிதர் கள் என்ருல் தொலைவில் இருக்கும் உறவினரைக் காணும் ஆவல் இராதா ?''

''நீயும் கூடப் போகிருயா ?''

இப்படி விஹாரி கேட்டதும், மகேந்திரன், பெரியப்பா வுடன் ஆசாவை அனுப்புவது சரியல்ல என்று வாதாடத்தான் விஹாரி வந்திருக்கிருன் என்று எண்ணினுன். அதிகமாகப் பேசினுல் கோபம் பொங்கிவரும் என்று அவன் சுருக்கமாக, ''இல்லை'' என்ருன்.

விஹாரிக்கு அவனை நன்ருகத் தெரியும். மகேந்திர னுக்குக் கோபம் வந்துவிட்டது என்று அவன் புரிந்துகொண் டான். மகேன் ஒன்று தீர்மானித்தால் அதை அசைக்கவே முடியாது என்றும் விஹாரி அறிவான். அதனுல் மீண்டும் அந்தப் பேச்சை அவன் எடுக்கவில்லை. 'பாவம், ஏதாவது மன வேதனையுடன் போகிருள் என்ருல், விநோதினியும் கூடப் போனுல் ஓரளவு ஆறுதலாகவாவது இருக்கும்' என்று அவன் எண்ணினுன். அதனுல் மெல்ல, 'விநோதினி மன்னியும் அவ ளுடன் கூடச்சென்ருல் நல்லதல்லவா ?'' என்ருன்.

மகேந்திரன் உரத்த குரலில், ''விஹாரி, உன் மனத்தில் என்னதான் இருக்கிறது, தெளிவாகச் சொல்லிவிடு! என் னுடன் புதிர் வைத்துப் பேசவேண்டிய அவசியமே இல்லை. எனக்கு விநோதினியின்மேல் ஆசை என்று உனக்குச் சந்தேகம். அது பொய். எனக்கு அவள்மேல் ஆசை இல்லை. என்னைக் காப்பாற்ற நீ பாரா கொடுக்கவேண்டிய தேவையே இல்லை. நீ உன்னைக் காத்துக்கொள். நட்பு உனக்கு உண்மையாகவே இருந்தால்,பல நாட்களுக்கு முன்பே என்னிடம் உன் மனத்தில் இருப்பதைச் சொல்லிவிட்டு என் அந்தப்புரத்திற்கே வராமல் இருந்திருப்பாய். உன் முகத்தின் எதிரிலேயே நான் பச்சை யாகச் சொல்கிறேன். உம்.... உனக்கு ஆசாவின்மேல் ஆசை உண்டு'' என்ருன்.

மிகவும் புண்பட்ட இடத்தை இரு கால்களாலும் மிதித் தால் தாக்குண்டவன் கணநேரங்கூட யோசிக்காமல் மிதித்த வனைப் பலத்தோடு தள்ள முயலுவதுபோல் விஹாரியும் வெளுத்த முகத்துடன் நாற்காலியைவிட்டு எழுந்து மகேந் திரனை நோக்கி ஓடினுன். பின்னர்ச் சட்டென்று நின்று மிகவும் பிரயாசையுடன், ''தெய்வம் உன்னை மன்னிக்கட்டும், நான் வருகிறேன்'' என்று தள்ளாடியவாறு வெளியே சென்ருன்.

பக்கத்து அறையிலிருந்து விநோதினி ஓட்டமாக வந்தாள். ''விஹாரி பாபு!'' என்ருள்.

விஹாரி சுவரில் ஊன்றி நின்று சிரிக்க முயன்ருன். ''என்ன, மன்னி!'' என்ருன்.

''விஹாரி பாபு, நானும் தோழியுடன் காசிக்குப் போகிறேன்.''

''இல்லை, மன்னி! அது கூடாது. உன்னை வேண்டிக் கொள்கிறேன். என் பேச்சைக் கேட்டுக்கொண்டு நீ எதையும் செய்யவேண்டாம். இங்கு நான் யார்? எதிலும் நான் கை வைக்க விரும்பவில்லை. அது நல்லதாக முடியாது. நீ தெய்வம். உனக்கு எது சரியென்று தோன்றுகிறதோ அதைச் செய். நான் போகிறேன்'' என்று விஹாரி விநோதினியைப் பணிவுடன் வணங்கினுன். ''நான் தெய்வமல்ல, விஹாரி பாபு! கேட்டுக்கொள்ளுங்கள்: நீங்கள் போய்விடுவது எவருக்கும் நல்லதல்ல. அப்புறம் என்னைக் குறை சொல்லாதீர்கள்!'' என்ருள் விநோதினி.

விஹாரி போய்விட்டான். மகேந்திரனும் திகைத்து உட்கார்ந்திருந்தான். விநோதினி சுடர்விடும் மின்னல்போல் அவனை ஒரு முறை கடுமையாகப் பார்த்துவிட்டுப் பக்கத்து அறையினுள் சென்ருள். அங்கு ஆசா, கூச்சமும் வேதனையும் கலந்து வாட்டத் தவித்துக்கொண் டிருந்தாள். விஹாரி தன்னைக் காதலிக்கிருன் என்று மகேந்திரன் தன்னுடைய வாயால் சொன்னதைக் கேட்டபின் அவளால் தலை தூக்க முடியவில்லை. ஆனுல் அவள்மேல் விநோதினிக்கு அநுதாபம் பிறக்கவில்லை. ஆசா தலை நிமிர்ந்திருந்தால் நிச்சயம் அவள் பயந்து போயிருப்பாள். உலகத்தின்மேல் விநோதினிக்கு அப்போது அளவற்ற எரிச்சல் மூண்டிருந்தது: பொய்ச்சொல்லா இது! விநோதினியை எவரும் காதலிக்கவில்லை. எல்லோருக்கும் இந்தக் கூச்சம் மண்டிய விளையாட்டுப் பொம்மையின்மேல் தான் ஆசை!

மகேந்திரன் ஏதோ ஆவேசத்தில் விஹாரியிடம், 'நான் வஞ்சகன்' என்று சொல்லிவிட்டான். பின்னர் ஆத்திரம் தணிந்ததும் தன்னையும் அறியாமல் மனத்தில் இருந்ததை வெளிவிட்டோமே என்று விஹாரியின்முன் குன்றிப் போனுன். தன் இரகசியமெல்லாம் வெளியாகி விட்டதாகவே அவன் எண்ணினுன். விநோதினியைத் தான் காதலிப்பது தெரிந்து விட்டது; இதனுல்தான் நண்பனின்மேல் ஓர் அருவருப்பு ஏற்பட்டிருந்தது மகேனுக்கு. அதற்கப்புறம் விஹாரி எதிரே வரும்போதெல்லாம், 'நம்முள் மறைந்திருக்கும் ஏதோ ஒன்றை அவன் ஆவலுடன் தேடுகிருன்' என்றே மகேந்திர

னுக்குத் தோன்றியது. அவ்வாறு ஒன்ருகச் சமைந்த வெறுப்பு இன்று சிறிதளவு தாக்குதலிலேயே வெளிப்பட்டு விட்டது.

ஆனல் விநோதினி பரபரப்புடன் பக்கத்து அறையிலிருந்து வெளிவந்தது, விஹாரியை பரிதாபமான குரலில் நிறுத்த முயன்றது, விஹாரியின் விருப்பப்படி ஆசாவுடன் காசிக்குச் செல்ல அவள் தயாராக இருந்தது இவற்றையெல்லாம் அவன் எதிர்பார்க்கவில்லை. இந்த நிகழ்ச்சிகள் மகேந்திரனைத் தாக்கித் திகைக்கவைத்தன. விநோதினியைக் காதலிக்கவில்லை என்ருன் அவன்; ஆனல் அவன் கண்டதும் கேட்டதும் அவனை நிம்மதியாக இருக்க விடவில்லை; நாலு பக்கங்களிலிருந்தும் அவனைப் பல விதங்களில் துன்புறுத்தின. 'நான் அவளைக் காதலிக்கவில்லை என்று சொன்னதை விநோதினி கேட்டுவிட்டாளே!' என்ற ஏக்கம் அவன் மனத்தை வாட்டியது.

23

'பொய். நான் விநோதினியைக் காதலிக்கவில்லை என்று சொல்லிவிட்டேனே! கடுமையான சொல் அல்லவா அது! அவளை நான் காதலிக்காமல் இருந்தாலும், அதைச் சொன்னது கடுமைதானே! இதைக் கேட்டு வருத்தப்படாத பெண்ணும் உலகில் உண்டா? இதை எதிர்த்துச் சொல்ல அவகாசம் எனக்கு எங்கே எப்போது கிடைக்குமோ! காதல் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. ஆனல் காதலிக்கவில்லை என்ற வார்த்தையைச் சற்று மெதுவாகப் புண்படுத்தாத வகையில் சொல்ல வேண்டியது அவசியம். இப்படி ஒரு தவருன கொடிய எண்ணம் விநோதினியின் உள்ளத்தில் நீடித்து வளரவிடுவது மிகவும் அநியாயம்' என்று எண்ணினுன் மகேந்திரன்.

பெட்டியினுள்ளிருந்து மூன்று கடிதங்களையும் எடுத்து அவன் மீண்டும் ஒரு முறை படித்தான். 'விநோதினி என்னைக் காதலிக்கிருள் என்பதில் ஐயமில்லை. ஆனல் நேற்று அவள் விஹாரியிடம் அப்படி வரக் காரணம் என்ன? எனக்குக் காட்டுவதற்காகத்தானு அது? அவளை நான் காதலிக்கவில்லை என்று தெளிவாகச் சொன்ன பிறகு, எப்படியாவது என் காதலைப் புறக்கணிக்க வேண்டும் என்று எண்ணியிருப்பாள். அப்படி என்னிடம் அவமதிப்பு அடைந்தபின் அவள் என்

முன்பே விஹாரியைக் காதலிக்கவும் காதலிக்கலாம்' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.

மகேந்திரனுக்கு ஆத்திரம் வந்தது. தன்னுடைய மனச் சஞ்சலத்தைக் கண்டு அவனுக்கே வியப்பாக இருந்தது. மகேந்திரன் காதலிக்கவில்லை என்று சொன்னதை விநோதினி கேட்டிருந்தால்தான் என்ன குறைந்துவிட்டது! ரோஷக்காரி விநோதினி; அதனால் அவன்மேலே அவளுக்கு உள்ள விருப்பம் போய்விட்டாலும் ஒன்றும் குறைந்துவிடாது! புயலின்போது படகின் சங்கிலி நங்கூரத்தை இழுப்பதுபோல், மகேந்திரனும் பரபரப்புடன் ஆசாவை மிகவும் உறுதியாகப் பற்றிக் கொண்டான்.

அன்றிரவு அவன் ஆசாவின் முகத்தை மார்பின் அருகில் அணைத்தவாறு, ''சுனி, உனக்கு என்மேல் எவ்வளவு ஆசை, சரியாகச் சொல், பார்க்கலாம்'' என்றான்.

'இதென்ன கேள்வி! விஹாரியைக் குறித்துச் சொன்ன அந்த வெட்கக் கேடான விஷயத்தினால் அவள்மேல் இந்தச் சந்தேகம் மூண்டுவிட்டதா!' என்று எண்ணினாள் ஆசா. கூச்சம் அவளைப் பிடுங்கித் தின்றது. ''சீச்சீ! இன்று ஏன் இப்படி என்னைக் கேட்கிறீர்கள்? உங்கள் காலில் விழுகிறேன், தெளிவாகச் சொல்லுங்களேன். எனக்கு உங்கள்மேல் உள்ள பற்றுதலில் ஏதாவது குறை இருக்கிறதா?'' என்றாள்.

ஆசாவை வாட்டி எடுத்து அவளுடைய இனிமையை வெளிப்படுத்த மகேந்திரன், ''அப்படியானால் காசிக்குப் போக விரும்புவானேன்?'' என்றான்.

''நான் காசிக்குப் போகவில்லை. நான் எங்கேயும் போக மாட்டேன்!''

''அப்போது சொன்னாயே!''

ஆசாவுக்கு வேதனையாக இருந்தது. ''நான் சொன்னதன் காரணந்தான் உங்களுக்குத் தெரியுமே!'' என்றாள்.

''என்னைவிட உன் பெரியம்மாவிடம் நீ நிம்மதியாக இருப்பாயோ என்னவோ?''

''ஒருகாலும் இல்லை. நிம்மதிக்காக நான் போக ஆசைப் படவில்லை.''

''நான் நிச்சயமாகச் சொல்லுகிறேன், சுனி! என்னைத் தவிர வேறு யாரையேனும் கல்யாணம் செய்துகொண்டிருந் தால் சுகமாக இருந்திருப்பாய்.'' ஆசா இதைக் கேட்டதும் திடுக்கிட்டு மகேந்திரனுடைய மார்பிலிருந்து விலகித் தலையணை யில் முகம் புதைத்துக் கட்டைபோல் அசைவற்றுக் கிடந்தாள். கண நேரத்துக்கெல்லாம் அவளால் அழுகையை அடக்க முடிய வில்லை. மகேந்திரன் அவளை அணைத்துக்கொண்டு ஆறுதல் கூற

முயன்முன். ஆசா தலையணையை விடவே இல்லை. அந்தப் பதிவிரதையின் ரோஷத்தைக் கண்டு, நிம்மதி, பெருமை, வெறுப்பு மூன்றுமாக மகேந்திரனைக் குன்றவைத்தன.

உள்ளுக்குள்ளேயே குமைந்து கொண்டிருந்த விஷயங்கள் எல்லாம் தெளிவாகி விடவே, எல்லோருடைய மனத்திலும் ஒரு குழப்பம் மூண்டது. 'இப்படித் தெளிவாகச் சொன்ன குற்றச்சாட்டுக்கு விஹாரி ஏன் மறுப்புக் கூறவில்லை?' என்று விநோதினிக்குத் தோன்றியது. பொய்க்காகவேனும் விஹாரி மறுதலித்திருந்தால் விநோதினிக்கு நிம்மதியாக இருந்திருக்கும். நல்லதாகவே ஆயிற்று. மகேந்திரன் கொடுத்த சாட்டை விஹாரிக்கு வேண்டியதுதான்! விஹாரியைப் போன்ற உயர்ந்த மனிதர் ஆசாவைக் காதலிப்பாரா? இந்தக் குற்றச்சாட்டு விஹாரியைத் தொலைவில் ஒதுக்கியது; இதுவும் நல்லதுதான் என்று விநோதினிக்கு நிம்மதி ஏற்பட்டது.

உயிர் போகுமாறு தாக்கிய அந்தக் குற்றச்சாட்டினுல் வெளுத்துப்போன விஹாரியின் முகம் மட்டும் விநோதினியை அவள் செய்யும் அலுவல்களிலெல்லாம் பின் தொடர்ந்தது. அவளுடைய உள்ளத்தினுள் இருந்த, பணியே தொழிலெனக் கருதும் பெண்மை அந்தப் பரிதாபமான முகத்தைக் கண்டு விம்மியது. நோயுற்ற குழவியைத் தாய் மார்பில் அணைத்துத் தாலாட்டுவதுபோல், அவனுடைய அந்த முகத்தை விநோதினி உள்ளத்தினுள் வைத்துத் தாலாட்டினுள். அவனுக்குத் தேறுதல் கூறிக் குணப்படுத்தி, அவனுடைய முகத்தில் மீண்டும் உதிரச் சிவப்பும், உயிரோட்டமும், புன்னகை மலர்ச்சியும் உண்டாக்கிக் காணும் ஆவல் விநோதினிக்கு உண்டாயிற்று.

இரண்டு மூன்று நாட்கள் வேலை செய்யும்போதெல்லாம் இப்படி ஒரே நினைவாக இருந்த விநோதினியால் அதற்குமேல் முடியவில்லை. அவள் அவனுக்கு ஓர் ஆறுதல் கடிதம் எழுதினுள்:—''விஹாரி பாபு! அன்று உங்களுடைய வாடிய முகத்தைக் கண்டது முதல், நீங்கள் முன்போல் சிரித்த முகத்துடன் ஆகவேண்டும் என்றே வேண்டிக்கொண்டிருக்கிறேன். உங்களுக்கே இயல்பான அந்தப் புன்னகையை என்று காண்பேன்? உங்கள் பெருந்தன்மையான பேச்சை என்று கேட்பேனே? நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? எனக்கு ஒரு வரி எழுதித் தெரிவியுங்கள்.

உங்கள்,
விநோத் மன்னி.''

விநோதினி வாயில்காப்போன் மூலமாக அந்தக் கடிதத்தை விஹாரிக்கு அனுப்பினுள்.

'ஆசாவை விஹாரி காதலிக்கிறான்' என்ற வார்த்தையை இவ்வளவு அழுத்தமாக, வெறுக்கத் தக்க விதமாக மகேந்திரன் சொல்லுவான் என்பதை விஹாரி கனவிலும் கற்பனை செய்ய வில்லை. அவன் தன் மனத்திலுங்கூட இதைப்பற்றித் தெளி வாக இடம் அளித்ததில்லை. முதலில் இடியுண்டவன்போல் ஆனவன், கோபமும் வெறுப்பும் மூண்டு தவித்தான். 'அநியாயம்! நடக்காது...சற்றும் இதற்கு அத்தாட்சி கிடை யாது!' என்று படபடத்தான் விஹாரி.

ஆனால் வெளியே உதறவிட்ட பேச்சை அழித்துவிட முடியுமா? அதனுள் இருந்த உண்மை வித்து மெல்ல முளை விட்டு வளரத் தொடங்கியது. பெண் பார்க்கச் சென்ற நாளன்று, மாலை மங்கலில் தோட்டத்தின் மென்மலர் மணம் கமழும் தென்றலிடையே, நாணிக் குனிந்த சிறுமியின் வனப் பார்ந்த முகத்தைத் தனக்கே உரியதென்று அன்பு கலந்த காதலுடன் ஒரு முறை நோக்கினான். அந்த முகம் இப்போது அவன் மனக்கண் முன் அடிக்கடி தோன்றியது. ஏதோ ஒன்று அவன் மார்பை அழுத்தியது, கொடிய வேதனை கழுத்தளவு வரையில் அவனை அலட்டி எடுத்தது. இரவு நீண்டநேரம் வரை மாடியிலும், வீட்டு எதிரே தெருவிலுமாக உலாவிய போது இதுகாறும் தெளிவற்று இருந்தது இப்போது அவ னுக்குத் தெள்ளென விளங்கியது. அடங்கிக் கிடந்ததெல்லாம் வெறிபிடித்தாடியது. இதுவரை அவனேகூட நினைத்திராத விஷயம் மகேந்திரன் சொன்ன சொல்லால் பேருருப்பெற்று உள்ளும் புறமும் விஹாரியைக் கவிந்துகொண்டது.

தான் குற்றவாளி என்றே அவனுக்குத் தோன்றியது. "நான் கோபம் கொள்வது அழகல்ல. மகேந்திரனிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு விடைபெற வேண்டும். 'மகேந்திரன்தான் தவறிழைத்தவன்; நான் நீதிபதி' என்ற தோரணையில் அன்று வந்துவிட்டேன். அது அநியாயம் என்று ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்" என்று அவன் எண்ணினான்.

ஆசா, காசிக்குப் போய்விட்டாள் என்று ஊகித்து ஒரு நாள் சாயங்காலம் மெல்ல அவன் மகேந்திரனுடைய வீட் டெதிரே வந்தான். ராஜலட்சுமியின் தூரத்து உறவினரான ஸாதுசரணரைக் கண்டு அவன், "ஸாது மாமா! கொஞ்ச நாட்களாக வர முடியவில்லை. இங்கு எல்லாரும் சௌக்கியந் தானே!" என்று கேட்டான். ஸாதுசரணர் அனைவருடைய நலத்தையும் தெரிவித்தார். விஹாரி, "மன்னி எப்போது காசிக்குப் போனாள்?" என்று கேட்டான்.

"அவள் போகவில்லை. காசிக்கு அவள் போகவும் மாட் டாள்!" - இதைக் கேட்டதும் விஹாரியின் மனம் எதையும்

பொருட்படுத்தாமல் அந்தப்புரத்தை நோக்கி விரைந்தது. முன்பு அவன் மிகவும் பழக்கமாகக் களிப்புடன் உறவினன் போல் பழகிய படிகளில் ஏறி உள்ளே போவான். எல்லோருடனும் இன்முகத்துடன் பேசிக் குளிர்விப்பான். அப்போதெல்லாம் அவனுக்கு ஒன்றுமே தடை இராது. இன்று அவ்வாறு நடக்க முடியாது; இனிமேல் முடியவும் முடியாது என்று தெரிந்ததும் அவன் உள்ளம் பித்துப்பிடித்தது போல் ஆயிற்று. ஒரே தடவை, அதுவே கடைசியாகவும் இருக்கட்டும்; உள்ளே போய் ராஜலட்சுமியுடன் கொஞ்சநேரம் பேசவேண்டும். ஆசாவை மன்னி என்று அழைத்துச் சில வார்த்தைகள் சொல்லிவிட்டு வரவேண்டும் - இவையே அவன் கோரியவை. அவனால் இந்த மனவேதனையைத் தாங்கவும் முடியவில்லை. ''என்ன அப்பா, இருட்டிலேயே நிற்கிறாய்? உள்ளே வா'' என்றார் ஸாதுசரணர்.

இதைக் கேட்ட விஹாரி விடுவிடென்று உள்ளே நான்கடி வைத்தவன் திரும்பினான். ''நான் வருகிறேன்; வேலை இருக்கிறது'' என்று பரபரவென்று நடந்தான். அன்றிரவே அவன் மேற்கு நோக்கிப் பயணமானான்.

விநோதினியின் கடிதத்துடன் சென்ற வேலையாள் விஹாரியைக் காணாமல் வந்தான். மகேந்திரன் அப்போது வாயிலின் முன்புறம் இருந்த சின்னத் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தான்.

''யாருடைய கடிதம்?'' என்றான் அவன். வேலையாள், மொத்த விவரத்தையும் தெரிவித்தான். மகேந்திரன் அந்தக் கடிதத்தைத் தானே வாங்கிக்கொண்டான்.

கடிதத்தைத் தானே எடுத்துச் சென்று விநோதினியிடம் கொடுக்கவேண்டும், தன் குற்றத்தால் அவள் முகம் சிவப்பதைக் காணவேண்டும், எதுவும் பேசக்கூடாது என்று ஒரு முறை அவனுக்குத் தோன்றியது. இதில் எழுதியிருப்பது நிச்சயம் அவள் நாணித் தலைகுனியத் தக்கதாகவே இருக்கும் என்று ஐயமற நம்பினான் மகேந்திரன். முன்புகூட ஒரு நாள் இப்படி விஹாரிக்கு அவள் கடிதம் அனுப்பியது அவனுக்கு நினைவு வந்தது. கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறது என்று தெரிந்துகொள்ளாமல் இருக்க அவனால் முடியவில்லை. 'விநோதினி என் வீட்டில் இருக்கிறாள்; அவளுக்கு நல்லதோ, கெட்டதோ வராமல் கவனித்துக்கொள்வது என் பொறுப்பு' என்று அவன் மனத்தைத் தேற்றிக்கொண்டான். ஆகவே, ஐயமூட்டும் இந்தக் கடிதத்தைப் படிக்க வேண்டியது அவன் கடமைதான். விநோதினியைத் தான் கெட்ட வழிக்குச் செல்ல விடுவது கூடாது என்று தீர்மானித்தான்.

அந்தச் சிறு கடிதத்தை அவன் பிரித்துப் படித்தான். தெளிவான மொழியில் இருந்தது அந்தக் கடிதம்; அதனால் அவனுடைய உள்ளத்திலிருந்த ஆவல் பளிச்சென்று வெளிப் பட்டது. கடிதத்தை அவன் பலதடவை படித்தான். வெகு தீவிரமாக யோசனை செய்தும் அவனுக்கு விநோதினியின் உள்ளப்போக்குத் தெரியவில்லை. உள்ளூற அவனுக்குச் சந் தேகம் வலுத்தது. 'நான் அவளைக் காதலிக்கவில்லை என்று சொல்லி அவமதித்தேன். அதனால்தான் ரோஷத்துடன் வேறு பக்கம் அவள் மனம் செல்கிறது. கோபத்தால்தான் அவள் என்மேல் நம்பிக்கையை இழந்துவிட்டாள்' என்று அவனுக்குத் தோன்றியது.

இவ்வாறு அவனுக்குத் தோன்றவே அவனால் பொறுத் திருக்க முடியவில்லை. விநோதினி அவனிடம் தன் அன்பை முழுவதும் கவிழ்த்துக்கொட்ட வந்தாள். கணநேர முட்டாள் தனத்தினால் அவள் தன் உரிமையிலிருந்து நழுவிச் சென்று விடுவாளோ என்ற அச்சம் அவனைச் சும்மா இருக்கவிட வில்லை. 'விநோதினி என்மேல் உள்ளூற ஆசை கொண்டிருந் தால் அது அவளுக்கு நல்லது. ஒரே இடத்தில் பிணைப்புடன் இருக்கலாம் அவள். என் மனம் எனக்குத் தெரியாதா! அவ ளுக்கு ஒரு போதும் நான் அநியாயம் செய்யமாட்டேன். அவள் பயமின்றி என்னை நேசிக்கலாம். நான் ஆசாவைக் காதலிக் கிறேன். அவளுக்கு என்னால் பயம் ஒன்றும் கிடையாது. ஆனால் விநோதினி வேறு பக்கம் மனத்தைச் செலுத்தினால் என்ன பாடுபடுவாளோ யாருக்குத் தெரியும்' என்றெல்லாம் எண்ணமிட்டான். தான் சிக்கிக்கொள்ளாமல் விநோதினியின் மனத்தை எப்படியாவது திருப்பவேண்டும் என்று சமயம் பார்த்திருந்தான் மகேந்திரன்.

மகேந்திரன் உள்ளே நுழையும்போது விநோதினி வழி யிலே எவரையோ எதிர்பார்த்து நிற்பதைக் கண்டான். நிமிஷத்துக்குள், அவனுடைய மனத்தில் வெறுப்புப் பொங்கி எழுந்தது. ''நீ நிற்பது வீண்தான்..காணமுடியாது. இந்தா உன் கடிதம். திரும்பி வந்துவிட்டது'' என்று அந்தக் கடிதத்தை அவள் பக்கம் வீசினான்.

''திறந்திருக்கிறதே!'' என்றாள் விநோதினி.

அதற்குப் பதில் கூறாமல் மகேந்திரன் சென்றான். விஹாரி கடிதத்தைப் படித்துவிட்டுப் பதில் அளிக்காமல் சென்றதாக எண்ணி அவள் உடம்பெல்லாம் ஓர் எரிச்சல் மூண்டது. கடிதத்தை எடுத்துச் சென்ற பணியாளைக் கூப்பிட்டு அனுப் பினாள். ஏதோ வேறு வேலையாகச் சென்றிருந்ததால் அவனைக் காணவில்லை. விளக்கின் திரியிலிருந்து சுடும் எண்ணெய்த்

துளி வடிவது போல் கதவைத் தாழிட்டுக்கொண்டு படுத்திருந்த விநோதினியின் சுடர் விழிகளிலிருந்து உள்ளத்தின் துன்பமும் குமுறலும் கண்ணீராக வடிந்தன. தன் கடிதத்தைச் சுக்குநூறாகக் கிழித்து எறிந்தும் அவளுக்கு அவை தணியவில்லை. அந்த நான்கு வரி மையின் கறையை முக்காலமும் ஒரேயடியாக இல்லை என்று சொல்லும்படி மறைக்க வழி இல்லையே! கோபம் அடைந்த தேனீ எதிரே அகப்பட்டவர்களையெல்லாம் கடிப்பது போல் தன்னைச் சுற்றி இருந்த உலகைச் சுட்டுப் பொசுக்கத் தயாரானாள், ரோஷமடைந்த விநோதினி! அவள் விருப்பத்துக்கெல்லாம் தடையா? எதனாலும் அவளுக்கு ஒரு நிறைவு கிட்டாதா? சுகம் கிட்டவில்லை; அதனால் தன்னுடைய நிம்மதிக்குத் தடையாக நின்று ஆவல் நிறைவேறாமல் தன்னைத் தடுத்து, தனக்கு வர இருந்த சுகங்களிலிருந்து தன்னை வஞ்சித்தவர்களைத் தோல்வியுறச் செய்து, புழுதியில் புரளச் செய்யவேண்டும், அப்போதுதான் தன் பாழ்பட்ட வாழ்வின் காரியம் முழுமை பெறும் என்று எண்ணினாள்.

24

அன்று பங்குனி மாதத் தொடக்கத்தில புதுத் தென்றல் வீசவும், ஆசா நீண்ட நாட்களுக்குப் பின்னர்ச் சாயங்காலமாக மாடியில் கம்பளத்தை விரித்துக்கொண்டு உட்கார்ந்தாள். மாதப்பத்திரிகை ஒன்றில் தொடர்ச்சியாக வரும் நவீனத்தை ஊன்றிப் படித்துக்கொண் டிருந்தாள். கதாநாயகன் ஓர் ஆண்டு கழிந்தபின் பூஜை விடுமுறைக்கு வீட்டுக்கு வரும் வழியில் கொள்ளைக்காரர்களின் கையில் சிக்கிக் கொண்டான். ஆசாவின் இதயம் நடுங்கலாயிற்று. இந்தப் பக்கம் கதாநாயகியோ கெட்ட கனவு கண்டு அழுதவாறு எழுந்திருக்கிறாள். இதற்கு மேலும் ஆசாவினால் கண்ணீரை அடக்க முடியவில்லை. வங்கக் கதைகளின்மேல் ஆசாவுக்குப் பிடித்தம் அதிகம். தான் படிப்பது எல்லாமே அவளுக்கு மிகவும் நல்லது எனத் தோன்றும். விநோதினியை அழைத்து அவள், 'இந்தக் கதையைப் படியேன். மிகவும் நன்றாக இருக்கிறது. படித்துவிட்டு அழுதேன், போயேன்' என்பாள். விநோதினி நல்லது, கெட்டது என்று விவாதம் எழுப்பி ஆசாவின் மனத்தில் பொங்கும் மகிழ்ச்சியைக் குலைப்பாள். இந்தக் கதையை மகேந்திரனுக்குப் படித்துச் சொல்ல

வேண்டும் என்ற உறுதியுடன் ஆசா புத்தகத்தை மூடினுள். அதே சமயம் மகேந்திரன் அங்கு வந்தான். அவனுடைய முகத்தைக் கண்டு ஆசா கவலேயுற்ருள். மகேந்திரன் கஷ்டப்பட்டு முகத்தில் புன்னகை வரவழைத்துக்கொண்டான். ''தனியாக மாடியில் எந்தப் புண்ணியவானே எண்ணிக்கொண்டிருக்கிருயோ!'' என்ருன். கதையில் வந்த தலேவன் தலேவி, இவர்களே மறந்து ஆசா, ''இன்று உடம்பு சரி இல்லேயா?'' என்ருள்.

''உடம்பு நன்ருகத்தான் இருக்கிறது.''

''அப்படியானுல், உங்கள் மனத்தில் அப்படி என்னதான் யோசனே? எனக்கு வெளிப்படையாகச் சொல்லுங்கள்.''

மகேந்திரன் ஆசா வைத்திருந்த வெற்றிலேப் பெட்டியிலிருந்து வெற்றிலேயை எடுத்து வாயில் போட்டுக்கொண்டான். ''உன் பெரியம்மா உன்னேப் பார்த்து வெகு காலமாகிறது. எதிர்பாராமல் நீ அவள் எதிரே போய் நின்ருல் எவ்வளவு சந்தோஷமாக இருக்கும் அவளுக்கு என்றுதான் யோசித்தேன்'' என்ருன்.

ஆசா பதில் கூருமல் மகேந்திரனுடைய முகத்தையே நோக்கினுள். திடீரென்று இந்தப் பேச்சு மீண்டும் எழக் காரணமென்ன என்று அவளுக்கு விளங்கவில்லே.

ஆசா வாய் திறவாமல் இருப்பது கண்டு அவன் மீண்டும் ''உனக்கு இஷ்டமில்லேயா போவதற்கு?'' என்ருன்.

இதற்குப் பதில் சொல்வது கஷ்டந்தான். பெரியம்மாவைக் காணச் செல்ல விருப்பந்தான். ஆனுல் மகேந்திரனேப் பிரிய மனம் இல்லே. ''காலேஜ் விடுமுறையின்போது நீங்கள் போனுல் நானும் கூட வருகிறேன்'' என்ருள் ஆசா.

''விடுமுறையின்போது கூடப் போக முடியாது. பரீட்சைக்குத் தயார் செய்துகொள்ள வேண்டாமா?''

''கிடக்கிறது; இப்போது போகாவிட்டால்தான் என்ன?''

''கிடப்பானேன்? போகவேண்டுமென்ருய்; போயேன்.''

''இல்லே; எனக்குப் போக மனமில்லே.''

''அன்றுதான் அவ்வளவு இஷ்டம் இருந்தது; அதற்குள் எல்லாம் போய்விட்டதா?''

ஆசா வாய் பேசாமல் தலே குனிந்து உட்கார்ந்திருந்தாள். விநோதினியுடன் சமாதானம் செய்துகொள்ள மகேந்திரனுக்குத் தடையின்றி அவகாசம் தேவை. அதற்காக அவன் உள்ளூறப் பொறுமையை இழந்து கொண்டிருந்தான். ஆசா கம்மென்று உட்கார்ந்திருப்பது கண்டு அவனுக்குக் காரணமின்றிக் கோபம் பிறந்தது. ''என்மேல் உனக்கு ஏதாவது சந்தேகமா என்ன? என்மேல் ஒரே கண்ணுக பாராக் கொடுக்க நினேக்கிருயா?'' என்ருன் அவன்.

ஆசாவுக்கு இயல்பான மென்மை, பணிவு, பொறுமை ஆகியவை மகேந்திரனுக்குச் சட்டென்று தாங்க முடியாமல் போயின. 'பெரியம்மாவிடம் போக ஆசைதான். சட்டென்று சொல்லேன்! நான் போகத்தான் வேண்டும், எப்படியாவது என்னை அனுப்பிவிடு என்று சொல்லித் தொலையேன்! ஒரு சமயம் சரி என்பது; ஒரு சமயம் வேண்டாம் என்பது; ஒரு சமயம் கம்மென்றிருப்பது-இதெல்லாம் என்ன?' என்று அவன் தனக்குள் பொருமினன்.

திடீரென்று மகேந்திரனுக்கு ஆத்திரம் வரவே, ஆசா வுக்கு வியப்பும் பயமும் மேலிட்டன. அவளால் எவ்வளவு முயன்றும் பதில் கூற முடியவில்லை. மகேந்திரன் சில சமயங் களில் அளவுக்கு மீறிக் கொஞ்சுவதும், சில சமயங்களில் கல்லைப்போலக் கடுமையாக ஆவதும் ஏன் என்று அவளுக்குப் புரியவில்லை. இப்படி மகேந்திரனைப்பற்றி அவளுக்குப் புதிர் அதிகரிக்க அதிகரிக்க அவளுடைய நடுங்கிய உள்ளம் காத லும், பயமும் மேலிட அவனையே பின்னும் சுற்றிக் கொண்டது.

மகேந்திரன்மேல் சந்தேகம் கொண்டு ஆசா அவன் மேல் கண் வைத்துப் பாராக் கொடுக்கிறளா! இது கேலிப்பேச்சா அல்லது கடுமையான சந்தேகந்தானு? இது பொய் என்று சபதம் செய்து எதிராடுவதா? இல்லை, கேலிப் பேச்சு என்று சிரித்துவிடுவதா?

ஆசா திகைத்துப் போய் ஒன்றும் பேசாமல் நிற்கவும், மகேந்திரன் ஆத்திரத்துடன் அங்கிருந்து எழுந்து வேகமாகச் சென்றுன். பத்திரிகையில் படித்த கதாநாயகன், கதாநாயகி இருவரும் எங்கோ கிடந்தார்கள்; மாலை மங்கல் இரவிரு ளிடையே மறைந்தது; மாலைத் தென்றலும் குளிர்காற்றாக வீசத்தொடங்கியது. ஆசா அப்போதும் அந்தக் கம்பளத்தி லேயே குப்புறக் கிடந்தாள்.

இரவு நேரங்கழித்து ஆசா படுக்கச் சென்றபோது, மகேந்திரன் அவளை அழைக்காமலே தூங்கிவிட்டதைக் கண் டாள். அன்புத் தெய்வமான பெரியம்மாவை அலட்சியம் செய்ததாக எண்ணியே மகேந்திரனுக்குத் தன் மேல் வெறுப்பு என்று ஆசாவுக்குத் தோன்றியது. படுக்கையில் ஆசா மகேந்திரனுடைய கால்களைப் பிடித்துக்கொண்டு அவற்றின்மேல் முகம் வைத்துப் படுத்தாள். மகேந்திரன் மனம் உருகி அவளை அணைக்க முயன்றுன். ஆசா எழுந் திருக்கவில்லை.

''நான் ஏதாவது தப்புச் செய்திருந்தால் என்னை மன்னித்து விடுங்கள்'' என்றுள் அவள்.

மகேந்திரன் இளகிய குரலில், ''உன்மேல் என்ன தப்பு, சுனி! நான் வஞ்சகன். அதனால்தான் உன்னைக் காரணமின்றிப் புண்படுத்தினேன்'' என்றான்.

மகேந்திரனுடைய கால்களை ஆசாவின் கண்ணீர் வெள்ளம் கழுவியது. அவன் எழுந்து அவளைத் தூக்கி அணைத்துப் பக்கத்தில் படுக்க வைத்தான். ஆசாவின் அழுகை சற்றுக் குறையவே, அவள், ''பெரியம்மாவைப் பார்க்க எனக்கு ஆவல் இல்லையா? ஆனால் உங்களை விட்டுப் போக எனக்கு மனம் இல்லை. அதனால்தான் நான் போக விரும்பவில்லை. என்மேல் கோபப்படாதீர்கள்'' என்றாள்.

மகேந்திரன் ஆசாவின் கன்னங்களில் வடிந்த நீரைத் துடைத்தவாறு, ''இதில் கோபிக்க என்ன இருக்கிறது, சுனி? என்னைப் பிரிய மனம் இல்லை என்றால், அதனால் எனக்குக் கோபமா வரும்? நீ எங்கேயும் போகவேண்டாம்'' என்றான்.

''இல்லை. நான் காசிக்குப் போகிறேன்.''

''ஏன்?''

''உங்கள்மேல் சந்தேகத்தினால்தான் நான் போகவில்லை என்று உங்கள் வாயால் சொல்லிவிட்டீர்கள். அதற்காகக் கொஞ்ச நாட்களாவது நான் போகத்தான் வேண்டும்.''

''நான் செய்த பாவத்துக்கு நீ பிராயச்சித்தம் செய்வதா?''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது; நான் ஏதாவது பாவம் செய்திராவிட்டால் இந்த மாதிரி கேட்கக்கூடாத பேச்செல்லாம் ஏன் கிளம்புகிறது? கனவிலும் எண்ணாததெல்லாம் கேட்கும்படி ஏன் ஆகவேண்டும்?''

''அதற்குக் காரணம், நான் எவ்வளவு கெட்டவன் என்பது உன் கனவுக்கும் எட்டாததுதான்.''

''மறுபடியும் அப்படிச் சொல்லாதீர்கள்! ஆனால் இந்தத் தடவை நான் காசிக்குப் போகத்தான் வேண்டும்.''

மகேந்திரன் சிரித்தான். ''சரி, போ! ஆனால் உன் கண் மறைவாக நான் கெட்டுப் போனால், என்ன செய்வது?'' என்றான்.

''நீங்கள் வேறு எனக்குப் பயம் காட்டவேண்டாம். நானே கவலைப்பட்டுச் சாகிறேன்.''

''ஆனால் கவலைப்படவேண்டியது அவசியந்தானே? உன் புருஷனை நீ அஜாக்கிரதையாக நாசமாகும்படி விட்டுவிட்டால், பிறகு யார்மேல் குறைகூறுவது?''

''உங்களைச் சொல்ல மாட்டேன். அதற்காக நீங்கள் கவலைப்பட வேண்டாம்.''

''உன் குற்றத்தை ஒப்புக்கொள்வாயாக்கும்!''

''நூறு தடவை வேண்டுமானாலும் ஒப்புக்கொள்வேன்.''

"சரி; நாளைக்கு உன் பெரியப்பாவைப் பார்த்து நிச்சயம் செய்துவிட்டு வருகிறேன்" என்றதும், இரவு வெகு நேரமாகி விட்டதென்று அவன் திரும்பிப் படுத்தான். கொஞ்சம் பொறுத்து அவன் மீண்டும் திரும்பி, "சுனி, நீ போகாவிட் டால்தான் என்ன! வேண்டாம்" என்றான்.

ஆசா பரிதாபமாக, "மீண்டும் ஏன் தடுக்கிறீர்கள்? இப் போது ஒரு தடவை போகாவிட்டால் நீங்கள் சொன்ன அந்தச் சொல் என்னை உறுத்திக்கொண்டே இருக்கும். இரண்டு மூன்று நாட்களாவது என்னை அனுப்பிவையுங்கள்" என்றாள்.

"சரி" என்று மகேந்திரன் திரும்பிப் படுத்தான்.

காசிக்குப் போவதற்கு முந்திய நாள் ஆசா விநோதினி யைக் கட்டிக்கொண்டு, "அடி, என்னைத் தொட்டுச் சொல், ஒரு விஷயம்..." என்றாள்.

ஆசாவின் கன்னத்தைக் கிள்ளி, விநோதினி, "என்னடி! உன் வேண்டுகோளை நான் நிறைவேற்றி வைக்கமாட்டேனா?" என்றாள்.

"என்னவோ? இப்போதெல்லாம் நீதான் ஒருமாதிரியாக இருக்கிறாயே! என் புருஷர் எதிரே வருவதுகூட இல்லையே!"

"ஏன் வருவதில்லை என்று உனக்குத் தெரியாதா! அன்று விஹாரி பாபுவிடம் என்ன சொன்னாரென்று உன் காதால் நீ கேட்கவில்லையா? இதெல்லாம் வளர்ந்த பிறகு நான் அவர் எதிரே வருவது நல்லதா? நீயே சொல்லேன்?"

அது நன்றாக இராது என்று ஆசாவுக்கும் தெரியும். இந்தப் பேச்சினால் உண்டாகும் வெட்கக்கேடு எவ்வளவு என்பது அவளுக்கும் இதற்குள் புரியத் தொடங்கியது. "இன்னும் எத்தனையோ வார்த்தைகள் கூடக் கிளம்பும். அவற்றையெல்லாம் பொறுத்துக் கொள்ளாவிட்டால் பாசமும் பரிவும் எதற்கடி! அவற்றை மறந்து விடு" என்றாள் ஆசா.

"சரி, மறந்து விடுகிறேன்."

"நாளை நான் காசிக்குப் போகிறேன். என் கணவருக்கு அசௌகரியம் ஏற்படாமல் நீ கவனித்துக்கொள்ள வேண்டும். இப்போது போல் அப்போதும் ஒளிந்து ஆடக்கூடாது."

விநோதினி வாய் திறக்கவில்லை. ஆசா அவளுடைய கைகளைப் பிடித்துக் கூறினாள்: "என் தலையைத் தின்றாற் போல்: இந்த வாக்குறுதி நீ எனக்குத் தரத்தான் வேண்டும்."

"சரி" என்றாள் விநோதினி.

25

சந்திரன் ஒரு புறம் மறைந்தால் கதிரவன் மறு பக்கம் உதயமாகிறான். ஆனால் ஆசா சென்ற பின்னரும் மகேந்திரனின் அதிருஷ்டம், விநோதினியின் தரிசனமே கிடைக்கவில்லை. மகேந்திரன் சுற்றுவான்; நடுநடுவே ஏதாவது சாக்கிட்டுத் தன் தாயின் அறைக்கு வருவான். விநோதினியோ ஒளிந்து மறைவாள்; பிடி கொடுப்பதில்லை.

மகேந்திரன் இவ்வாறு ஒன்றும் பிடிக்காமல் அலைவது கண்டு ராஜலட்சுமி, 'பெண்டாட்டி போய்விட்டதால்தான் வீட்டில் மகேனுக்கு எதுவும் பிடிக்கவில்லை' என்று எண்ணினாள். இப்போதெல்லாம் மகேந்திரனுடைய சுகதுக்கங்களில் தாய்க்கு மனைவியைப்போல் அவ்வளவு அக்கறை இராமற் போனாலும் மகேந்திரனுடைய வாட்டம் அவளுக்கு வேதனையைத் தந்தது. விநோதினியிடம் அவள், ''இன்ப்ளூயன்ஸா வந்தது முதல் எனக்கு இரைப்பு எடுக்கிறது. படிக்கட்டு ஏறி என்னால் மேலே போக முடியவில்லை. நீதான் அம்மா கூட இருந்து மகேந்திரனுக்கு வேண்டியதெல்லாம் கவனித்துக் கொள்ளவேண்டும். அவனுக்கு அதிக நாள் பழக்கம்; யாரேனும் இருந்து கவனிக்காவிட்டால் அவனால் இருக்கவே முடியாது. பாரேன்; பெண்டாட்டி போனதுமுதல் அவன் ஒரு மாதிரியாக மாறிவிட்டான். அவளுந்தான் எப்படிப் போனாளோ, மகராஜி!'' என்றாள்.

விநோதினி முகம் கோணிக்கொண்டு தான் போர்த்திருந்த கம்பளத்தை விரலில் சுற்றலானாள். ''என்ன யோசிக்கிறாய்? இதில் யோசிக்க என்ன இருக்கிறது! யார் என்ன சொன்னாலும் நீ வேற்று மனுஷி இல்லையே!'' என்றாள் ராஜலட்சுமி.

''வேண்டாமே, அம்மா! அவசியமில்லை'' என்றாள் விநோதினி.

''நல்லது, அம்மா! அவசியமில்லைதான். என்னால் முடிந்தவரை நானே கவனிக்கிறேன்'' என்று அவள் மூன்றும் மாடியில் இருந்த மகேந்திரனுடைய அறையைச் சுத்தம் செய்யக் கிளம்பினாள்.

விநோதினி பரபரப்படைந்தாள். ''வேண்டாம், அம்மா! உங்களுக்கு உடம்பு இன்னும் குணமாகவில்லை. நீங்கள் போக வேண்டாம்; நானே போகிறேன். என்னை மன்னித்து விடுங்கள், அத்தை. இனிமேல் நீங்கள் என்ன கட்டளையிட்டாலும் செய்கிறேன்'' என்றாள்.

ஊரார் பேச்சை ராஜலட்சுமி மதிப்பதே இல்லை. கணவன் காலமானது முதல் குடும்பத்திலோ, சமூகத்திலோ அவளுக்கு மகேந்திரனைத் தவிர ஒன்றுமே தெரியாது. மகேந்திரனைப்பற்றிச் சமூகம் தூற்ற இடம் நேரும் என்று விநோதினி சொன்னது அவளுக்கு வெறுப்பூட்டியது. பிறவி முதல் அவள் மகனைக் கவனித்து வருகிறாள்! அவனைப்போல் நல்ல பிள்ளை உண்டா! அந்த மகனைப்பற்றி அவதூறா? யாரேனும் அப்படித் தூற்றினால் அவர்கள் நாக்கு அழுகிவிடாதா! தனக்கு எது பிடித்ததோ, அல்லது நல்லதாகத் தோன்றியதோ அதற்காக உலகத்து மக்கள் யாவரையும் அலட்சியம் செய்யக்கூடிய அளவு பிடிவாதம் அவளுக்கு இருந்தது.

அன்று மகேந்திரன் காலேஜிலிருந்து வந்ததும் தன் படுக்கை அறையைக் கண்டு வியப்படைந்தான். கதவைத் திறந்ததுமே சந்தனத் தூள், ஊதுவர்த்தியின் நன்மணம் அறையெங்கும் கமழ்ந்தது. கொசு வலையில் ரோஜா நிற ஜாலர் பின்னியிருந்தது. கீழே படுக்கையில் வெளேரென்ற துப்பட்டி பளிச்சிட்டது. அதன்மேல் பழைய தலையணைக்குப் பதில், வெல்வெட்டும் பட்டும் கலந்து பூவேலை செய்த புத்தம்புதுச் சீமைத் தலையணைகள் போட்டிருந்தன. அந்த வேலைப்பாடுகளை முடிக்க விநோதினி வெகு நாட்கள் முனையவேண்டியிருந்தது. ஆசா அவளிடம், 'இது யாருக்காகப் போடுகிறாய்?' என்று கேட்பாள். விநோதினி சிரிப்புடன், 'கட்டையில் ஏறும் போது எனக்கு வேண்டாமா? சாவைத் தவிர என்னை இனி யார் கொஞ்சப் போகிறார்கள்?' என்று பதில் சொல்வாள்.

சுவரில் தொங்கிய மகேந்திரனுடைய போட்டோச் சட்டத்தின் நான்கு மூலைகளிலும் நிறநிறமான நாடாக்கள் சட்டப்பட்டிருந்தன. அதன் கீழே சிறு மேஜையின்மேல் இரண்டு பூச்செப்புக்களில் வண்ணமலர் செருகி வைத்திருந்தது. இது மகேந்திரனுடைய உருவப் படத்துக்கு முன் பின் தெரியாத ஒரு பக்தை அளித்த அஞ்சலிபோல் இருந்தது மொத்தத்தில் அறையின் உருவமே மாறியிருந்தது. கட்டில் கொஞ்சம் நகர்ந்திருந்தது. அறை இரு பிரிவுகளாக ஆகியிருந்தது. கட்டிலின் எதிரே கொடியில் துப்பட்டிகளைத் தொங்க விட்டுவிடவே, மறைவுபோல் தோன்றியது. கீழே உட்காரும் படுக்கையும், இரவில் தூங்கும் கட்டிலும் தனியாகப் பிரிந்தன. ஆசாவின் விளையாட்டுச் சாமான்கள், சைனா பொம்மை எல்லாம் வைத்திருந்த அலமாரியின் கண்ணாடிக் கதவுகளின் உட்புறம் சிவப்புத் துணியைத் திரைபோல் அடித்துவிடவே, உள்ளிருக்கும் பொருள்கள் வெளியே தெரியாமல் இருந்தன. அறையில் முன்பு இருந்தவற்றின் சின்னமே

இல்லை. புதுக் கை ஒன்றின் திறன் எல்லாவற்றையும் மறைத்து விட்டிருந்தது.

சோர்வுடன் இருந்த மகேந்திரன் தரையில் விரித்திருந்த படுக்கையில் புதுத் தலையணைகளில் தலை வைத்ததும் மென்மையான மணம் வருவதை உணர்ந்தான். தலையணையின் உள்ளே அடைத்த பஞ்சில் நாக மல்லிகையின் மகரந்தமும், அத்தரும் கலந்து வைத்திருந்ததால் உண்டான மணந்தான் அது. மகேந்திரனுடைய விழிகள் தாமாக மூடிக்கொண்டன. இந்தத் தலையணையின்மேல் திறம்படப் பூவேலை செய்த சிற்பியின் மென்விரல் மணமே கமழ்வதாக அவனுக்குத் தோன்றியது.

இந்தச் சமயம் வேலைக்காரி வெள்ளித் தட்டில் கொஞ்சம் பழத்துண்டுகளும் பட்சணங்களும், ஒரு கண்ணாடிக் கோப்பையில் மாதுளை ஷர்பத்தும் கொணர்ந்தாள். முன்பெல்லாம் நடப்பதற்கும் இன்று நிகழ்பவற்றுக்கும் எவ்வளவோ வித்தியாசம். இவ்வளவு ஒழுங்கும் கவனமும் அப்போது ஏது! சுவை, மணம், காட்சி எல்லாவற்றிலும் புதுமையின் எழில் தோன்றி அவனுடைய புலன்களை மயக்கின.

அவன் திருப்தியாக உண்டபின்னர், வெள்ளித் தட்டில் வெற்றிலையும் பாக்கும் எடுத்துக்கொண்டு விநோதினி மெல்ல உள்ளே வந்தாள். சிரித்துக்கொண்டே அவள், ''இத்தனை நாள் நீங்கள் சாப்பிடும்போது வர முடியவில்லை. என்னை மன்னித்து விடுங்கள். என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். ஆனால் என்மேல் ஆணை: உங்களைக் கவனிக்கவில்லை என்று மட்டும் என் தோழியிடம் சொல்லிவிடாதீர்கள். என்னால் ஆனதை நான் செய்கிறேன். ஆனால் என்ன செய்வது? குடும்பத்தின் பொறுப்பு எல்லாம் என் தலையில்தானே இருக்கிறது'' என்று அவள் வெற்றிலைத் தட்டை அவன்முன் ஏந்தினாள். அந்த வெற்றிலைச் சுருளிலும் தாழைபோல் ஓர் இன்மணம் வீசியது.

''கவனித்துக்கொள்ளும்போதுகூட நடுநடுவே இப்படிக் குற்றம் குறைபாடு ஏற்படுவது நல்லதுதான்'' என்றான் மகேந்திரன்.

''எப்படி நல்லது?''

''அப்புறம் குத்திக் காட்டி வட்டியும் முதலுமாகப் பெற்றுக்கொள்ளலாமல்லவா!''

''மார்வாடியாரே! வட்டி எவ்வளவு சேர்ந்து விட்டதோ?''

''சாப்பிடும்போது வரவில்லை. சாப்பிட்டபின் வந்ததால் இன்னும் கிடைக்க வேண்டியது பாக்கி நிற்கிறது.''

விநோதினி சிரித்தாள். ''ஏது கணக்கு ரொம்பக் கண்டிப்

பாக இருக்கிறதே! உங்கள் கையில் ஒரு முறை சிக்கினால் தப்ப முடியாது போல் இருக்கிறதே!'' என்றாள்.

''கணக்கு என்னவானால் என்ன, வசூல் செய்ய முடிய வில்லையே!''

''வசூல் செய்யும்படி என்ன இருக்கிறது! அப்படி இருந்தும் கட்டிப் பிடித்து வைத்திருக்கிறீர்கள்'' என்று அவள் கேலிப் பேச்சிலிருந்து பெரிய விஷயத்திற்குத் தாவி ஒரு பெருமூச்சு விட்டாள்.

மகேந்திரனும் சற்று ஆழ்ந்த குரலில், ''இது சிறைச்சாலை யாகவா தோன்றுகிறது?'' என்றான்.

இந்தச் சமயம் வேலையாள் வழக்கம்போல் விளக்குக் கொணர்ந்து மேஜையின்மேல் வைத்துச் சென்றான்.

சட்டென்று விளக்கொளி கண்ணில் படவே விநோதினி கைகளால் கண்களை மறைத்துக்கொண்டு தலை குனிந்தாள். ''என்னவோ உங்களுடன் பேச எனக்கு அவ்வளவு சக்தி ஏது? நான் வருகிறேன்; எனக்கு வேலை இருக்கிறது'' என்றாள்.

மகேந்திரன் சட்டென்று அவள் கையைப் பிடித்துக் கொண்டான். ''கட்டிப் பிடித்திருப்பதை ஒப்புக்கொண்ட பின் எங்கே போகிறாய்!'' என்றான்.

''சீச்சீ! விடுங்கள். போக்கிடம் இராதவளைக் கட்டிப் பிடிக்க ஏன் முயலவேண்டும்!'' என்று விநோதினி பலவந்த மாகக் கைகளை உதறிக்கொண்டு சென்றாள்.

மகேந்திரன் அந்தப் படுக்கையிலேயே தலையணையில் சாய்ந்தான். அவனுடைய இதயத்தில் ரத்தம் கொந்தளித் தது. நிச்சப்தமான அந்தி நேரம்; தனியான அறை; புதுத் தென்றல் வீசியது. விநோதினியும் மனத்தைக் கொடுப்பவள் போல் வந்தாள். வெறிபிடித்த மகேந்திரனால் தன்னைக் கட்டுப்படுத்த முடியாதுபோல் தோன்றியது. பரபரவென்று விளக்கை அணைத்துவிட்டு அவன் அறைக் கதவைத் தாழிட் டான். பிறகு பொழுதைக் கழிக்காமல் படுக்கையில் படுத்துக் கொண்டான்.

அந்தப் படுக்கையும் முன்பு போல் இல்லை. முன்பு இருந் ததைவிடப் பின்னும் மெத்தென்று இருந்தது. அங்கும் ஓர் இன்மணம். வெட்டி வேரா அல்லது அத்தரா எதுவென்று புரியவில்லை. மகேந்திரன் இப்படியும் அப்படியுமாகப் பல தடவை புரண்டான். எங்கேயாவது பழமையின் சின்னம் சிறிதேனும் கிடைத்தால் அதைப் பற்றிக்கொள்ள முயன்றான் அவன். ஆனால் எதுவும் அவன் கைக்குக் கிட்டவில்லை.

இரவு ஒன்பது மணிக்கு அறைக் கதவைத் தட்டும் ஓசை கேட்டது. விநோதினி வெளியிலிருந்து கூப்பிட்டாள்: ''கத

வைத் திறவுங்கள். உங்களுக்குச் சாப்பாடு கொண்டு வந்திருக்கிறேன்.''

சட்டென்று கதவைத் திறக்க மகேந்திரன் வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்து போனவன் தாழ்ப்பாளில் கை வைத்தான். ஆனால் திறக்கவில்லை. தரையில் குப்புறக் கவிழ்ந்துகொண்டு அவன், ''வேண்டாம். எனக்குப் பசி இல்லை, சாப்பிடப் போவதில்லை நான்'' என்றான்.

வெளியிலிருந்து கவலை தோய்ந்த குரல் கேட்டது: ''உடம்புக்கு ஒன்றுமில்லையே! ஜலம் கொண்டு வரட்டுமா? ஏதாவது வேண்டுமா?''

''எனக்கு ஒன்றும் அவசியமில்லை; எதுவும் வேண்டாம் எனக்கு.''

''என்னிடம் எதையும் மழுப்பாதீர்கள்! சரி, உடம்புக்கு ஒன்றுமில்லையே? அறைக் கதவைத் திறவுங்களேன்.''

மகேந்திரன் உரத்த குரலில், ''திறக்க மாட்டேன். ஒரு காலும் மாட்டேன். நீ போ'' என்றான்.

அவன் மீண்டும் படுக்கையில் படுத்தான். மறைந்த ஆசா வின் நினைவை, சூனியமாக இருந்த படுக்கையிலும், அலைபாயும் உள்ளத்தின் இருளிலும் துழாவித் திரிந்தான் அவன்.

தூக்கம் வரவில்லை. ஆகவே, அவன் விளக்கை ஏற்றிப் பேனா, காகிதம் எடுத்துக்கொண்டு ஆசாவுக்குக் கடிதம் எழுத உட்கார்ந்தான் - ''ஆசா! என்னை இன்னும் அதிக நாட்கள் தனிமையில் தவிக்கவிடாதே! என் வாழ்வின் திரு மகள் நீ. நீ அருகில் இராவிட்டால் என்னுடைய சுபாவம் கட்டறுத்துக்கொண்டு எந்தப் பக்கம் என்னை இழுத்துச் செல்லுமோ எனக்கு விளங்கவில்லை. வழிபார்த்துச் செல்லலாம் என்றால் விளக்கு எங்கே? அந்த விளக்கு, நம்பிக்கை நிறைந்த உன் விழிகளின் குளிர்ந்த அன்புப் பார்வைதான். நீ சீக்கிரம் வா. எனக்கு நன்மை உண்டாக்குபவளே! எனக்கு உறுதுணை நீ ஒருத்தியேதான். எனக்கு நிம்மதியைத் தா; காப்பாற்று. என் உள்ளத்தை நிரப்பு; உனக்குச் சிறிதளவும் வஞ்சகம் செய்யும் மாபாதகத்திலிருந்து, உன்னைக் கணமும் மறக்கும் பயங்கரத்திலிருந்து என்னைக் கடைத்தேற்றிவிடு.''

இவ்வாறு மகேந்திரன் ஆசாவின் பக்கம் தன் மனத்தைத் திருப்பும் உத்தேசத்துடன் இரவு வெகு நேரம் என்னென் னவோ எழுதினான். வெகு தொலைவில் மாதா கோயிலின் கடிகாரத்தில் மணி மூன்றடித்தது. கல்கத்தாவின் தெருக்களில் வண்டிகளின் நடமாட்டம் இல்லை என்றே சொல்லலாம். பேட் டையின் இன்னொரு மூலையில் எங்கேயோ ஒரு வீட்டின் மாடி யில் பியாக் ராகத்தில் பாடிக்கொண்டிருந்த நடிகையின் குரல்

கூட ஊரெங்கும் நிறைந்து பரவிய அமைதியின் உறக்கத்தில் மூழ்கியது. மகேந்திரன் ஒரே உறுதியுடன் ஆசாவை எண்ணிய வாறு தன் மனத்தின் ஆவலை எல்லாம் நீண்ட கடிதத்தில் பல விதமாக எழுதி ஓரளவு ஆறுதல் அடைந்தான். அதற்குப் பின் படுக்கையில் படுத்ததுமே துயில் அவனை ஆட்கொள்ள வெகு நேரமாகவில்லை.

காலையில் அவன் எழுந்திருக்கும்போது நேரமாகிவிட்டது; அறையினுள் வெயில் பளீச்சிட்டது. அவன் பரபரப்புடன் எழுந் தான்.. தூங்கி எழுந்ததால் அவன் மனத்தில் முதல் நாளிரவு நிகழ்ச்சிகள் அவ்வளவு பாரமாக அழுத்தவில்லை. படுக்கையி லிருந்து எழுந்ததுமே ஆசாவுக்கு அவன் எழுதிய கடிதம் மேஜையின் மேல் இருப்பது கண்ணில் பட்டது. மகேந் திரன் அதை எடுத்துப் படித்தான். 'இதென்ன, நவீனம் போல் இருக்கிறதே! நல்லவேளை அனுப்பாமல் இருந்தேனே! ஆசா படித்தால் என்ன நினைப்பாள்! இதில் பாதிக்குமேல் அவளுக்குப் புரியவே புரியாது.' அன்று இரவு ஒரு கணத்தில் அவன் மனம் அளவுக்கு மீறிப் பொங்கியதை எண்ணி அவன் வெட்கிப் போனான். கடிதத்தைக் கிழித்து எறிந்தான். சாதாரணமாக ஆசாவுக்கு அவன் ஒரு கடிதம் எழுதினான்: "இன்னும் எத்தனை நாட்கள்தான் என்னைக் காக்க வைப்பாய்? உன் பெரியப்பா சீக்கிரம் திரும்ப மாட்டாரென்று தோன்றி னால் எனக்கு எழுது. நானே வந்து உன்னை அழைத்துப் போக வருகிறேன். இங்கே எனக்குத் தனிமை பிடிக்கவில்லை."

26

மகேந்திரன் போன சில நாட்களுக்குள் ஆசா காசிக்கு வரவே, அன்னபூரணியின் மனத்தில் சந்தேகம் வலுத்தது. அவள் ஆசாவைப் பலவாறாகக் கேள்விகள் கேட்டாள்: "ஏனடி சுனி! உன்னுடைய தோழியைப்பற்றிச் சொன்னாயே, அவளைப் போல் தங்கமான பெண் உலகில் இல்லை என்றுதானே உனக்குத் தோன்றுகிறது!"

"நிச்சயமாகத்தான், பெரியம்மா! புத்தி, அழகு அதற்கு ஏற்றாற்போல் வேலையிலும் கெட்டிக்காரத்தனம்!"

"உன் தோழி, அதனால் அவள் உனக்கு உயர்வாகத்தான் தோன்றுவாள். வீட்டில் மற்றவர்கள் என்ன சொல்லுகிறார் கள் அவளைப்பற்றி?"

அம்மா அவளைப்பற்றிப் புகழ்வதை அளவிட முடியாது! ஊருக்குப் போகிறேன் என்று அவள் கிளம்பினாலே அம்மாவுக்கு வெலவெலத்துப் போகிறது. அவளைப்போல் தொண்டு செய்ய யாருக்கு வரும்? வீட்டில் வேலைக்காரர்களுக்கு உடம்புக்கு வந்தாலுங்கூடத் தங்கைபோல், தாய்போல் கவனிக்கிறாள்.''

''மகேந்திரன் என்ன சொல்லுகிறான்?''

''அவரைத்தான் உனக்குத் தெரியுமே, பெரியம்மா! வீட்டு மனுஷ்யரைத் தவிர வேறு எவரையும் அவருக்குப் பிடிக்காது. என் தோழியை எல்லோரும் நேசிக்கிறார்கள். ஆனால் அவருக்கும் அவளுக்கும் என்னவோ சரியாக ஒத்து வரவில்லை.''

''அப்படி என்றால்?''

''நான் எத்தனையோ தடவை இருவரையும் சந்திக்க வைத்தேன். அவளுடன் அவர் சரியாகப் பேசுவதுகூட இல்லை. அவருடைய சுபாவம் உனக்குத் தெரியுமே! அவரை 'அகம்பாவம் பிடித்தவன்' என்று எல்லோரும் சொல்லுகிறார்கள். ஆனால் உண்மையில் இரண்டொருவரைத் தவிர அவருக்கு எவரையுமே பிடிப்பதில்லை.''

கடைசி வார்த்தையைச் சொல்லி முடித்ததுமே திடீரென்று ஆசாவுக்கு நாணம் மேலிட்டது. கன்னம் சிவப்பேறியது. அன்னபூரணி உள்ளூறச் சிரித்துக்கொண்டாள். ''அப்படியா! அன்று மகேந்திரன் வந்தபோது உன் தோழியைப் பற்றி ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை'' என்றாள் அவள்.

ஆசாவுக்கு வருத்தமாக இருந்தது. ''இதுதான் அவரிடம் காணும் குறைபாடு. ஒருத்தரைப் பிடிக்காவிட்டால் அவர் வரைக்கும் அந்த ஆள் இராததுபோலத்தான். அந்த ஆளைப் பார்த்தோ அறிமுகமாகியோ இராதது போல் அவருடைய போக்கு இருக்கும்'' என்றாள் அவள்.

அன்னபூரணி அமைதியாகச் சிரித்து, ''அவனுக்கு யார் மீது காதலோ, அவளையே பல பிறவிகளிலும் காண்பான்; அவளையே அறிவான். இதுவுங்கூட அவனுடைய குணங்களில் ஒன்று; என்ன சொல்லுகிறாய், சுனி?'' என்றாள்.

ஆசா பதில் கூறாமல் தலை குனிந்தாள். அன்னபூரணி மீண்டும் கேட்டாள்; ''சுனி! விஹாரியின் சமாசாரம் என்ன? அவன் கல்யாணமே செய்துகொள்ள மாட்டானா?''

கண நேரத்துக்குள் ஆசாவின் முகம் மாறிவிட்டது. இதற்கு என்ன பதில் சொல்வதென்று அவளுக்குத் தெரியவில்லை.

ஆசா கம்மென்றிருக்கவே அன்னபூரணிக்குப் பயமாகி விட்டது. ''உண்மையாகச் சொல், சுனி! விஹாரிக்கு உடம்பு ஒன்றும் இல்லையே?'' என்றாள்.

குழந்தைகள் இராத இந்தப் பெண்ணின் அன்புப் பெட்டகத்தில் விஹாரி மகனைப்போல் வீற்றிருந்தான். குடும்பத்தில் அவனை நிலைத்திருக்கச் செய்யாமல் வந்துவிட்டோமே என்ற வேதனை இன்னும் அவள் மனத்தில் இருந்தது. அவளுடைய சிறு குடும்பத்தில் எல்லாம் ஒருவாறு முடிந்துவிட்டன. விஹாரிக்கு 'இன்னும் வீடு என்று ஏற்படவில்லையே என்ற கவலை அந்தத் துறவிக்கு ஒரு தடையாக இருந்தது.

''பெரியம்மா! விஹாரி பாபுவைப்பற்றி என்னை ஒன்றும் கேட்காதே'' என்றாள் ஆசா.

அன்னபூரணி வியப்படைந்தாள். ''ஏனடி?''

"என்னால் சொல்ல முடியாது'' என்றதும் ஆசா அறையிலிருந்து வெளியே சென்றாள்.

. அன்னபூரணி கம்மென்று உட்கார்ந்து யோசிக்கலானாள்: 'தங்கமான பையன் விஹாரி! இதற்குள் அவன் அவ்வளவு தூரம் மாறிவிட்டானா? ஆசா அவன் பேரைக் கேட்டதும் எழுந்துவிட்டாளே! எல்லாம் விதியின் விளையாட்டு; அவனுக்குச் சுனியைக் கல்யாணம் செய்து கொடுக்கும் பேச்சு எழுவானேன்! அவன் கையிலிருந்து மகேந்திரன்தான் ஏன் பிடுங்கிக் கொள்ளவேண்டும்?'

வெகு நேரம் கழிந்த பின்னர் அன்னபூரணி கண்ணீர் வடித்தாள். ''விஹாரி அயோக்கியனல்ல. அப்படி ஏதாவது செய்திருந்தாலும், அதை எவ்வளவோ வருத்தத்துடன்தான் செய்திருப்பான். எளிதாகச் செய்துவிடக் கூடியவனல்ல'' என்றது அவள் உள்ளம். அவனுடைய வேதனையைக் கற்பனை செய்துகொண்டு அவளும் மனம் வருந்தினாள்.

சாயங்காலம் அன்னபூரணி ஜபம் செய்ய உட்கார்ந்த போது வாசலில் வண்டி வந்து நின்றது. வண்டிக்காரன் வீட்டிலுள்ளவரைக் கூப்பிட்டுக் கதவைத் தட்டினான். அன்னபூரணி பூஜை அறையிலிருந்து, ''அடடா! மறந்தேவிட்டேன். இன்று குஞ்சரத்தின் மாமியாரும் அவளுடைய தங்கை பெண்ணும் அலாகாபாதிலிருந்து வருவதாகச் சொன்னார்கள். அவர்களாகத்தான் இருக்கும். ஆசா! விளக்கை எடுத்துப் போய்க் கதவைத் திற'' என்றாள்.

ஆசா விளக்குடன் சென்று கதவைத் திறந்ததுமே அங்கு விஹாரி நிற்பதைக் கண்டாள். "இதென்ன, மன்னி! நீ காசிக்கு வரவில்லை என்று கேள்விப்பட்டேனே?'' என்றான் விஹாரி.

ஆசாவின் கையிலிருந்து விளக்குக் கீழே விழுந்தது. அவள்

பிசாசைக் கண்டவள் போல் ஒரே மூச்சில் மேலே ஓடிப் பரிதாப மான குரலில், ''பெரியம்மா உன் காலில் விழுகிறேன்; இப்போது அவரைப் போகச் சொல்'' என்ருள்.

அன்னபூரணி ஜபத்தைவிட்டுப் பரபரப்புடன் எழுந்தாள். ''யாரையடி, சுனி, யாரைச் சொல்கிருய்?'' என்ருள்.

''விஹாரி பாபு இங்கேயும் வந்துவிட்டார்'' என்று ஆசா பக்கத்து அறைக்குள் சென்று தாழிட்டுக்கொண்டாள்.

விஹாரி கீழிருந்தே மேலே நடந்த பேச்சைக் கேட்டான்; அவன் உடனே போகத் துடித்தான். ஆனல் பூஜையை விட்டு அன்னபூரணி கீழே வந்தபோது, விஹாரி வாசல் கதவருகில் கீழே மண்ணில் உட்கார்ந்திருந்தான். அவன் உடம்பில் தெம்பே இல்லை.

அன்னபூரணி விளக்குக் கொண்டுவரவில்லை. இருளில் அவன் முகம் அவளுக்குச் சரியாகத் தெரியவில்லை. விஹாரியா லும் அவளைப் பார்க்க முடியவில்லை.

''விஹாரி'' என்ருள் அன்னபூரணி. பல நாட்கள் பழகிய அந்த அன்பு மண்டிய குரல் எங்கே? அந்தக் குரல் கடுமை யும் தீவிரமும் கலந்து இடி போலல்லவா முழங்கியது! அன்னை அன்னபூரணி இன்று யார்மேல் இந்தப் போர்வாளை வீச எடுத் திருக்கிருள்! துரதிருஷ்டசாலியான விஹாரி இன்று இருளில் அவள் பாதங்களில் தலைவைத்து வணங்க அல்லவா வந்தான்!

மின்னலால் தாக்குண்டது போல் அவனுடைய உடல் நடுங்கியது. அவன், ''சித்தி! இதுபோதும்; மேலே ஒன்றும் பேசாதே! நான் போகிறேன்'' என்று தரையில் தலை வைத்து வணங்கினன். அன்னபூரணியின் பாதங்களைக்கூட அவன் தொடவில்லை. கங்கை நீரில் மகனைத் தாய் துறப்பதுபோல் அன்னபூரணி மௌனமாக அந்த இருளில் விஹாரியை நழுவ விட்டாள். ஒரு முறை அவனைத் திரும்புமாறு அழைக்க வும் இல்லை. வண்டி விஹாரியுடன் மெல்ல மறைந்தது.

அன்றிரவே ஆசா மகேந்திரனுக்குக் கடிதம் எழுதினள்: ''விஹாரி பாபு இங்கு இன்று சாயங்காலம் திடீரென்று வந்திருந்தார். பெரியப்பா எப்போது கல்கத்தா வருவாரோ, நிச்சயமில்லை. நீங்கள் சீக்கிரமாக வந்து என்னை அழைத்துச் செல்லுங்கள்.''

27

முதல் நாள் இரவு கண் விழித்ததும், மன உளைச்சல் பட்டதும் சேர்ந்துகொள்ளவே காலையில் மகேந்திரனுக்கு ஒரே சோர்வாக இருந்தது. பங்குனி மாதத்து நடுப்பகுதி. வெயில் தொடங்கிவிட்டது. சாதாரணமாக மகேந்திரன் காலை வேளைகளில் படுக்கை அறையின் ஓரமாக இருந்த மேஜையருகே புத்தகம் படிப்பது வழக்கம். அன்று அவன் கீழே இருந்த மெத்தையின்மேல் தலையணையில் சாய்ந்து படுத்தான். பொழுது ஏறியும் அவன் குளிக்கச் செல்லவில்லை. தெருவோடு வியாபாரம் செய்வோர் கூவிச் சென்றனர். ஆபீசுக்குச் செல்லும் வண்டிகளின் ஓசையும் ஓயவில்லை. பக்கத்தில் புது வீடு கட்டிக்கொண் டிருந்தார்கள். அங்கு வேலை செய்யும் பெண்கள் ஓயாமல் மாடியின் தரையைத் தட்டியவாறு அதன் தாளத்துக்கேற்பப் பாடலாயினர். சற்றே வெம்மையுடைய தென்றல் காற்றில் மகேந்திரனுடைய நரம்புகள் பின்னும் தளர்ச்சியடைந்தன. கடுமையான உறுதி, கஷ்டமான முயற்சி, மனப்போராட்டம் இவற்றுக்கு இந்த வசந்த ருதுவின் நாள் ஏற்றதல்ல; மனம் போனவாறு கவலையின்றி படுத்துக் கிடப்பதற்கே இது ஏற்றது. ''உங்களுக்கு என்ன! குளிக்க வேண்டாமா! சாப்பாடும் தயாராகிவிட்டது., அதென்ன படுத்திருக்கிறீர்களே? உடம்புக்கு ஏதாவது வந்திருக்கிறதா ? தலைவலியா என்ன?'' என்று விநோதினி அவன் அருகில் வந்து நெற்றியில் கைவைத்துப் பார்த்தாள்.

மகேந்திரன் விழிகளைப் பாதி மூடியவாறு குழறும் குரலில், ''இன்று உடம்பு என்னவோபோல் இருக்கிறது. குளிக்கவில்லை'' என்றான்.

''குளிக்காவிட்டால் போகிறது. இரண்டு பிடி சாப்பிடவாவது செய்யுங்கள்'' என்று அவள் அவனைப் பலவந்தமாகச் சாப்பிடும் இடத்துக்கு அழைத்துச் சென்று மிகவும் கவனித்து வேண்டிச் சாப்பிடவைத்தாள்.

சாப்பிட்ட பின்னர் மீண்டும் மகேந்திரன் படுக்கையில் படுத்தான். விநோதினி தலைமாட்டில் உட்கார்ந்து மெல்ல அவனுடைய தலையைப் பிடித்தாள். மகேந்திரன் மூடிய விழிகளுடன், ''விநோத்! நீ இன்னும் சாப்பிடவில்லையே! போய்ச் சாப்பிடு'' என்றான்.

விநோதினி எழுந்திருக்கவில்லை. பகல் வேளையின் வெப்பக் காற்று அறையின் திரைச் சீலைகளை அசைத்தது. சுவரோரம் அசைந்த தென்னை மரத்தின் கீற்றுகளின் சலசலப்பு

அறையினுள் எதிரொலித்தது. மகேந்திரனுடைய இதயம் வரவர வேகமாகத் துடித்தது. விநோதினியின் பெருமூச்சும் அதே வேகத்தில் மகேந்திரனுடைய நெற்றியில் படிந்த தலை மயிரை அசைத்தது. இருவரில் எவரும் வாய் திறக்கவில்லை. 'எல்லையில்லாத உலகப் பெருங்கடலின் தடையற்ற பெருக்கில் மிதக்கிறேன். படகு கணநேரம் எங்கே போய் நிற்குமோ.. அதனால் யாருக்கு என்ன வந்துவிடப் போகிறது? அதுவும் எவ்வளவு நேரந்தான் நிலைக்கப்போகிறது?' என்று எண்ண மிட்டான் மகேந்திரன்.

தலையின் அருகில் நெற்றியைத் தடவியவாறு இருந்த விநோதினி கவலை குடிகொண்ட இளமையின் உத்வேகத்தால் மெல்லத் தலை குனியலானாள். கடைசியில் அவளுடைய கூந்த லின் நுனிச்சுருள் மகேந்திரனுடைய நெற்றிமீது விழுந்தது. காற்றில் அசைந்த அந்தக் குழற்கற்றையின் மென்மையான பரிசம் அவனுடைய உடலெங்கும் சிலிர்ப்பை ஊட்டியது. பெரு மூச்சு, தன் மார்பின் அருகில் தடையுண்டு வெளிவர வழி தெரி யாமல் தவிப்பது போல் இருந்தது அவனுக்கு. பரபரப்புடன் ''எனக்குக் காலேஜ் இருக்கிறது. நான் போகிறேன்'' என்று அவன் அவளுடைய முகத்தைக்கூடப் பாராமல் எழுந்தான்.

''அவசரப்படாதீர்கள். உங்களுடைய உடைகளைக் கொண்டு வருகிறேன்'' என்று விநோதினி புது ஆடைகளைக் கொணர்ந்து அவனிடம் கொடுத்தாள்.

மகேந்திரன் அவசரமாகக் காலேஜுக்குச் சென்றான். ஆனால் அங்கு அவனால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. படிப் பில் கவனம் செலுத்த எவ்வளவோ பாடுபட்டும் வெற்றி அடையாமல் சீக்கிரமே வீடு திரும்பினான்.

அறையினுள் நுழைந்தபோது விநோதினி படுக்கையில் மார்புக்குக் கீழே தலையணையை வைத்துக் குப்புறப் படுத்தவாறு ஏதோ புத்தகம் படித்துக்கொண் டிருந்தாள். அவளுடைய கருங்கூந்தல் முதுகில் அலை புரண்டது. மகேந்திரனுடைய பூட்ஸின் சப்தம் கேட்கவில்லை அவளுக்கு. அவன் மெல்ல அவள் பக்கத்தில் வந்து நின்றான். படிக்கும்போது அவளுடைய நீண்ட பெருமூச்சும் அவனுக்குக் கேட்டது.

''கருணைக் கடலே! கற்பனையிலுள்ள பேர்வழிகளுக்காக உள்ளத்தை வீணாகச் செலவு செய்துவிடாதே! என்ன படிக் கிறாயோ?'' என்றான் மகேந்திரன். விநோதினி பரபரப்புடன் எழுந்து புத்தகத்தைத் தலைப்பினுள் மறைத்துக்கொண்டாள். மகேந்திரன் அதைப் பிடுங்கிப் பார்க்க முயன்றான். வெகு நேரம் கைகலந்தபின் தோல்வியுற்ற விநோதினியின் கையிலிருந்து மகேந்திரன் புத்தகத்தைப் பிடுங்கினான். புத்தகத்தின் பெயர்

விஷ விருக்ஷம்.' விநோதினி பெருமூச்சு விட்டவாறு கோபத்துடன் முகம் திருப்பிக் கொண்டு கம்மென்றிருந்தாள்.

மகேந்திரனுடைய இதயம் அலையாடியது. வெகுவாகப் பிரயாசைப்பட்டு அவன் சிரித்து, ''சீச்சீ! ஏமாந்து போனேன். ஏதாவது ரகசியமான புத்தகமோ என்று பார்த்தேன். இவ்வளவு நேரம் கஷ்டப்பட்டுப் பிடுங்கிப் பார்த்தால் போயும் போயும் விஷ விருக்ஷந்தானு!'' என்றான்.

''என்னிடம் ரகசியம் என்ன இருக்கிறதாம்!'' என்றாள் விநோதினி.

மகேந்திரன் சட்டென்று சொல்லிவிட்டான்; ''விஹாரியிடமிருந்து ஏதாவது கடிதம் வந்தது என்று வைத்துக் கொள்ளேன்.''

கண நேரத்துக்குள் விநோதினியின் கண்களில் தீ பறந்தது. இவ்வளவு நேரம் அறையினுள் விளையாடிக்கொண்டிருந்த மன்மதன் இரண்டாவது முறையாகச் சாம்பலானான். தூண்டி விட்ட தீப்பிழம்பென விநோதினி எழுந்து நின்றாள். மகேந்திரன் அவளுடைய கையைப் பிடித்தான். ''என்னை மன்னித்துவிடு! என் கேலிப்பேச்சை மறந்துவிடு'' என்றான்.

விநோதினி பலவந்தமாகக் கைகளை விடுவித்துக்கொண்டாள். ''யாரைக் கேலி செய்கிறீர்கள்? அவருடன் தோழமை கொள்ள உங்களுக்குத் தகுதி இருக்குமானால் அவரை நீங்கள் ஏளனம் செய்வதை நான் பொறுக்க முடியும். உங்கள் மனம் மிகவும் அற்பமானது; நட்புப் பூணும் உறுதி அதற்குக் கிடையாது. கேலி வேறு செய்கிறீர்களா?'' என்று விநோதினி வெளியே செல்லக் காலெடுத்தபோது மகேந்திரன், கைகளால் அவளுடைய காலைக் கட்டிக்கொண்டான். இதே சமயம் எதிரே ஒரு நிழல் தெரிந்தது. மகேந்திரன் விநோதினியின் காலைவிட்டுத் திடுக்கிட்டுத் தலை நிமிர்ந்தான். எதிரே விஹாரி நிற்பது தெரிந்தது.

நிலைத்த பார்வையால் இருவரையும் பொசுக்கியவாறு நிதானமாக விஹாரி, ''நான் வேளை தெரியாமல் வந்து விட்டேன்; ஆனால் வெகு நேரம் இருக்கமாட்டேன். ஒரு விஷயம் சொல்ல வந்தேன். காசிக்குப் போனேன். அங்கு மன்னி இருப்பது எனக்குத் தெரியாது; தெரியாமல் அவளிடம் குற்றவாளி என்று பெயர் வாங்கிக்கொண்டேன். அவளிடம் மன்னிப்புக் கேட்க எனக்குப் பொழுதில்லை. ஆனால் உன்னிடம் மன்னிப்புக் கேட்க வந்திருக்கிறேன். என் மனத்தில் தெரிந்தோ, தெரியாமலோ ஏதாவது பாபத்தீடு இருந்தால், அதற்காக அவள் எப்போதும் துயரப்படக் கூடாது. இதுவே உன்னிடம் நான் வேண்டுவது'' என்றான்.

விஹாரியின் முன்னிலையில் தன் பலவீனம் வெளியாகி விட்டதே என்று மகேந்திரனுக்கு எரிச்சல் மூண்டது. பெருந் தன்மையுடன் இருக்க இதுவா வேளை? அவன் சற்றுச் சிரித்தான். ''பூஜை உள்ளே வைத்திருந்த வாழைப்பழத்தைத் தின்ற கதை போலிருக்கிறது, நீ சொல்லுவது. உன்னை ஒப்புக்கொள்ளவும் நான் சொல்லவில்லை; மறுக்கவும் சொல்லவில்லை. பின் மன்னிப் புக் கேட்டுக்கொள்ளச் சாதுபோல் வருவானேன்?'' என்றான்.

விஹாரி மரக்கட்டை போல் சற்று நேரம் அசைவற்று நின்றான். பின்னர்ப் பதில் சொல்லும் முயற்சியில் உதடுகள் துடிப்பது கண்டு விநோதினி, ''விஹாரி பாபு! நீங்கள் பதில் சொல்ல வேண்டாம். ஒன்றும் சொல்லாதீர்கள். இவர் சொன்ன வார்த்தைகளால் இவருடைய வாய்தான் மாசு பட்டது. அந்த மாசு உங்களைத் தீண்டாது'' என்றாள்.

விநோதினியின் வார்த்தைகள் விஹாரியின் காதில் விழுந்தனவா இல்லையா என்பது சந்தேகந்தான். அவன் கன வில் நடப்பவன்போல் மகோந்திரனுடைய அறையை விட்டுப் படிகளில் இறங்கலானான்.

விநோதினி அவன் பின்னால் ஓடினாள். ''விஹாரி பாபு! என்னிடம் சொல்வதற்கு விஷயம் இல்லையா? என்னைத் திட்ட வேண்டுமானால் தயங்கவேண்டாம்'' என்றாள்.

விஹாரி அதற்கும் பதில் சொல்லாமல் நடப்பது கண்டு விநோதினி அவன் எதிரே வந்து இரு கைகளாலும் அவனுடைய வலது கையைப் பிடித்துக்கொண்டாள். விஹாரி வெறுப் புடன் அவளைத் தூரத் தள்ளிவிட்டுச் சென்றான். அந்தத் தாக்குதலில் விநோதினி விழுந்ததுகூட அவனுக்குத் தெரியாது.

விழுந்த ஓசை கேட்டு மகேந்திரன் விரைந்து வந்தான். விநோதினியின் இடக் கையில் முழங்கை அருகே அடிபட்டு ரத்தம் கசிந்துகொண்டிருந்தது.

''அடி பலமாகப் பட்டிருக்கிறதே!'' என்று அவன் தன்னுடைய மெல்லிய சட்டையில் கொஞ்சம் கிழித்து அடி பட்ட இடத்தில் கட்டுப் போட முன் வந்தான். விநோதினி பரபரப்புடன் கையை விடுவித்துக்கொண்டாள். ''வேண்டாம். ஒன்றும் செய்யாதீர்கள்! ரத்தம் வரட்டும்'' என்றாள்.

''கட்டுப் போட்டு மருந்து தருகிறேன். அப்புறம் வலியே இராது. சீக்கிரம் சரியாகி விடும்.''

விநோதினி நகர்ந்து நின்றாள். ''எனக்கு வேதனை குறைய வேண்டாம். காயம் அப்படியே இருக்கட்டும்'' என்றாள்.

''இன்று நான் பொறுமை இழந்து இன்னொருத்தர் முன்னிலையில் உன்னை இழிவுபடுத்திவிட்டேன். என்னை மன் னித்து விடமாட்டாயா?''

''எதற்காக மன்னிப்பு! நான் ஊராருக்குப் பயந்தவளல்ல. நீங்கள் செய்தது நல்லதுதான். யாரையும் நான் மதிப்பவளல்ல. என்னைத் தள்ளிவிட்டுப் போகிறவர்கள்தாம் எனக்கு உயர்ந்தவர்களா, என் காலைப் பிடித்து நிறுத்தமுயலுபவர்கள் எனக்கு வேண்டாதவர்களா?''

மகேந்திரன் வெறிபிடித்தவன் போல் குரல் தடுமாற, ''விநோதினி! அப்படியானால் என் காதலை உன் காலினால் உதைத்துத் தள்ளிவிடமாட்டாயே?'' என்றான்.

''தலையில் வைத்துக்கொள்வேன். காதல் என்பதை என் பிறவி முதல் அதிகம் அநுபவித்தவளல்லவே, வேண்டாமென்று அதை உதைத்துத் தள்ளுவதற்கு!'' மகேந்திரன் தன் இரு கைகளாலும் அவளுடைய கைகளைப் பிடித்துக் கொண்டான். ''அப்படியானால் என் அறைக்கு வா; உனக்கு இன்று நான் வேதனை அளித்தேன். நீயும் என்னைக் கஷ்டப்படுத்திவிட்டாய். அது ஒரேயடியாக மறையும் வரையில் ஊண் உறக்கத்திலும் எனக்கு நிம்மதியே இராது.''

''இன்று வேண்டாம். என்னை விட்டுவிடுங்கள். உங்கள் மனத்தை நான் கஷ்டப்படுத்தியிருந்தால் என்னை மன்னித்துவிடுங்கள்.''

''நீயும் என்னை மன்னித்துவிடு. இராவிட்டால் இரவு எனக்குத் தூக்கம் வராது.''

''மன்னித்துவிட்டேன்'' என்றாள் விநோதினி.

மகேந்திரன் அப்போதே விநோதினியிடம் கையோடு கையாக மன்னிப்பையும் காதலுக்கான அடையாளத்தையும் பெற்றுக்கொள்ளத் துடித்தான். ஆனால் விநோதினியின் முகத்தைக் கண்டதும் திடுக்கிட்டு நின்றான். விநோதினி படிகளில் இறங்கிக் கீழே சென்றாள். மகேந்திரன் மேலே மாடியில் உலாவத் தொடங்கினான். விஹாரியிடம் தான் அகப்பட்டுக்கொண்டதில் அவன் மனம் விடுதலை பெற்றதுபோல் மகிழ்ச்சியுற்றது. ஒளிந்து களவு ஆடுவதில் உள்ள அருவருப்பு, ஒருவனுக்கு அது தெரிந்ததும் குறைந்துவிடும். 'நான் நல்லவன் என்று இனி மேல் பொய் சொல்லித் திரியவேண்டியதில்லை. ஆனால் நான் காதலிக்கிறேன். இது பொய்யல்ல' என்று இவ்வாறு அவன் தனக்குள் சொல்லிக்கொண்டான். காதலின் பெருமை அவனுக்கு அளவற்ற கர்வத்தை மூட்டியது. தன்னைக் கெட்டவன் என்று கொள்வதிலும் அவன் பெருமை கொண்டான். நிச்சப்தமான அந்திப் பொழுதில் ஒளிச்சுடர்கள் பளிச்சென விளங்கிய மோன உலகை அவன் அவமதிப்புடன் நோக்கினான். ''யார் என்னை எவ்வளவு கெட்டவனாக வேண்டுமானாலும் நினைத்துக்கொள்ளட்டும்; ஆனால் நான் காதலிக்கிறேன்''

என்று அவன் விநோதினியின் கற்பனை உருவை வானிலும் உலகிலும் எங்கும் கண்டு களித்தான். விஹாரி இன்று அரக்குப் போட்டு மூடி மகேந்திரனுடைய இதயத்துள் இருந்த ஒரு மசிக்கூட்டை உடைத்துவிட்டான். விநோதினியின் கார்க்குழலும், கருவிழிகளும் உலகெங்கும் பரவி, முன்பு வெளுப்பாக இருந்த யாவற்றையும் கருமையாக்கிவிட்டன.

28

மறு நாள் எழுந்ததுமே மகேந்திரனுடைய இதயம் ஓர் இனிய நினைவினால் நிறைந்திருந்தது. விடியலில் பகலவனும் அவனுடைய எண்ணத்தையும் ஆசையையும் தங்கமயமாக்கி விட்டான். எத்துணை அழகிய உலகம்; தேனினும் இனிய வானம்; காற்றும் பூவின் மகரந்தம்போல மனத்தையே அடித்துச் சென்றது!

காலை வேளையில் வைஷ்ணவப் பிச்சைக்காரர்கள் கஞ்சிராத் தாளத்துடன் பாடத் தொடங்கினார்கள். காவல்காரன் அவர்களை விரட்ட முன் வந்தபோது, மகேந்திரன் அவனை அடக்கி, அவர்களுக்கு ஒரு ரூபாய் அளித்தான். வேலைக்காரன் ஹரிக்கேன் லாந்தரை எடுத்துச் செல்லும்போது கவனப் பிசகால் கீழே போட்டு உடைத்துவிட்டான். மகேந்திரனுடைய முகத்தைக் கண்டதும் அச்சத்தில் அவனுக்கு உயிரே போய்விடும்போல் ஆகிவிட்டது. மகேந்திரன் அவனை மிரட்டாமல், முக மலர்வுடன், ''அடே! அங்கே நன்றாக விளக்குமாற்றால் சுத்தம் செய்துவிடு. யாருடைய காலிலாவது கண்ணாடி குத்திவிடப் போகிறது'' என்றான். அன்று நஷ்டங்களை எல்லாம் அவன் பெரிதாக எண்ணவில்லை.

காதல் இதுவரை திரை மறைவில் காத்திருந்தது. இன்று திரையைத் தள்ளிக்கொண்டு முன்வந்து நின்றது. உலகைக் கவிந்த திரையும் விலகியது. தினசரி உலகில் காணும் சிறுமை அன்று மறைந்தது. மரம் செடி பறவைக் கூட்டம், வழியில் செல்லும் ஜனத்திரள், பட்டணத்தின் இரைச்சல் எல்லாம் அன்று அருமையாக இருந்தன. உலகெங்கும் அன்று பரவிய புதுமை இதுவரை எங்கிருந்ததோ!

''மற்ற நாட்களைப்போல் விநோதினியின் சந்திப்பு இன்று சாதாரணமாக இராது. கவிதைமூலம் பேசுவதும், இசையில் உணர்வைக் காட்டுவதும் நிகழக்கூடிய காரியமானால்

அன்றைய தினத்தை, செல்வத்தையும் அழகையும் கொண்டு நிறைவு பெறச் செய்து, உலகச் சுழல்களை மீறிய அரபுக் கதைகளில் காணும் ஓர் இன்ப தினமாக்க அவன் எண்ணமிட்டான். அது உண்மையாகவும் இருக்கும்; கன வாகவும் தோன்றும். குடும்பத்தின் கட்டுப்பாடுகளோ, ஒரு பொறுப்போ, உண்மையோ அதில் இராது.

காலை முதலே அவன் நிலையின்றி உலாவினன். காலேஜுக்குச் செல்ல' அவனால் முடியவில்லை. சந்திப்பு எந்தக் கணத்தில் எதிர்பாராது நிகழுமோ அதைத் தெளிவாக எந்தப் பஞ்சாங்கத்திலும் எழுதவில்லையே!

வீட்டு வேலையில் ஈடுபட்டிருந்த விநோதினியின் குரல் உக்கிராண அறையிலிருந்தோ, சமையல் அறையிலிருந்தோ அவனுடைய காதில் வந்து விழுந்தவாறு இருந்தது. அவனுக்கு அது பிடிக்கவில்லை. குடும்பத்து அலுவல்களிலிருந்து தனியே தொலைவில் நிறுத்தி அவளை அவன் கற்பனை செய்துகொண் டிருந்தான்.

பொழுது போகவில்லை அவனுக்கு. அவன் குளித்துச் சாப்பிட்டாகிவிட்டது. வேலைகள் எல்லாம் முடிந்து பகற் பொழுது நிச்சப்தமாகியது. அப்படியும் விநோதினியைக் காணவில்லை. ஒரு புறம் துக்கம், மறு புறம் சுகம்; ஒரு பக்கம் நம்பிக்கை, மறு புறம் ஆத்திரம்-இவை மாறி மாறி அவனுடைய மனத்தின் தந்திகளை மீட்டிச் சென்றன.

முதல் நாள் அவன் கைப்பற்றிய அந்த 'விஷ விருக்ஷம்' படுக்கையின்மேல் கிடந்தது. அதைக் கண்டதும் முதல் நாளைய நிகழ்ச்சி மகேந்திரனுக்கு நினைவு வரவே, அவன் மனத்தினுள் ஓர் இன்பத்தின் மின்னல் ஓடியது. விநோதினி மார்பின்கீழ் வைத்துப் படுத்திருந்த தலையணையின்மேல் தலை வைத்துப் படுத்தான் மகேந்திரன். விஷ விருக்ஷத்தைக் கையில் எடுத்துக்கொண்டு அதன் பக்கங்களைப் புரட்டினன். அவ்வாறே எப்போது படிக்கத் தொடங்கினனே தெரியாது. மணி ஐந்து அடித்ததுகூட அவனுக்குத் தெரியவில்லை. இந்தச் சமயத்தில் ஒரு மோரதாபாத் தட்டில் பழம், சந்தேஷ் (இனிப்புப் பட்சணம்) ஒரு கண்ணாடிக் கோப்பையில் பனிக்கட்டி, சர்க்கரை, வாசனை கலந்து துருவிய முலாம் பழம் இவற்றை எடுத்துக்கொண்டு விநோதினி உள்ளே வந்து அவன் எதிரே வைத்தாள். ''என்ன செய்கிறீர்கள்? உங்களுக்கு என்ன? மணி ஐந்தாகிவிட்டது. இன்னும் முகம் கைகால் கழுவவோ, வேறு உடைகள் அணியவோ இல்லையே!'' என்றாள்.

மகேந்திரனுக்கு வாரிப் போட்டது. அவனுக்கு என்ன என்பது கேட்கவேண்டிய கேள்வியா! அவளுக்கு அது தெரியா

மல் இருப்பது அழகாகுமா! மற்ற நாட்களைப் போலவா இன்றும்! தான் எதிர்பார்த்திருப்பதற்கு நேர் விரோதமாக ஏதாவது நேரிடுமோ என்று அஞ்சி அவன் முதல் நாளைய நிகழ்ச்சியை நினைவூட்டி உரிமை ஏதும் கொண்டாட முனையவில்லை.

அவன் சாப்பிட உட்கார்ந்தான். விநோதினி வெளியே காயப் போட்டிருந்த மகேந்திரனுடைய துணிகளை உள்ளே கொணர்ந்து ஒழுங்காக மடித்து அலமாரியில் வைத்தாள்.

''கொஞ்சம் பொறு; சாப்பிட்டுவிட்டு வந்து உனக்கு ஒத்தாசை செய்கிறேன்'' என்றான் மகேந்திரன்.

விநோதினி கைகூப்பினாள். ''உங்களுக்குப் புண்ணியம் உண்டு. வேறு ஏதாவது செய்தாலும் சரி; ஒத்தாசை மட்டும் வேண்டாம்'' என்றாள்.

மகேந்திரன் சாப்பிட்டுவிட்டு எழுந்தான். ''அப்படியா! என்னைக் கையாலாகாதவன் என்று நினைக்கிறாயா? இன்று என் திறமையைச் சோதனை செய்து பார்'' என்று அவன் துணிகளை வீம்புக்காக மடிக்கலானான்.

விநோதினி, அவன் கைகளிலிருந்து துணியைப் பிடுங்கினாள். ''ஐயா பெரியவரே! போதும். வீணாக என் வேலையை அதிகப்படுத்தாதீர்'' என்றாள்.

''சரி நீபாட்டில் உன் வேலையைச் செய். நான் அதைக் கவனித்துக் கற்றுக்கொள்கிறேன்'' என்று அவன் அலமாரியின் பக்கத்தில் விநோதினியின் அருகே தரையில் உட்கார்ந்தான். விநோதினி துணிகளை உதறும் சாக்கில் அவனுடைய முதுகில் தட்டித் துணிகளை மடித்து அலமாரியினுள் வைத்தாள்.

அன்றைய சந்திப்பு இவ்வாறு தொடங்கியது. காலையில் அவன் கற்பனை செய்ததுபோல் அபூர்வமாக எதுவும் நடக்கும் என்று தோன்றவில்லை. இவ்வாறு சந்திப்பது காவியம் புனைவதற்கோ, இசையுடன் பாட்டு அமைப்பதற்கோ, புதுமையாக ஏதாவது எழுதுவதற்கோ உகந்ததல்ல. ஆனால் மகேந்திரன் அதற்காகக் கவலைப்படவில்லை. ஓரளவு நிம்மதியும் அடைந்தான் அவன். கற்பனையில் தான் கொண்ட குறிக்கோளை எவ்வாறு நிலைநாட்டுவது, அதற்கு என்ன ஏற்பாடுகள் தேவை, என்ன பேசவேண்டும், உணர்ச்சியை எவ்வாறு வெளிப்படுத்துவது, அற்ப விஷயங்களையெல்லாம் எப்படி விலக்குவது இதெல்லாம் அவனுக்குத் தெரியவில்லை. துணி உதறுவது, மடிப்பது இவைகளில் கேலியும் சிரிப்புமாக அவன் நடைமுறைக்கு வராத ஒரு குறிக்கோளிலிருந்து விடுதலை பெற்று மகிழ்ந்தான்.

இந்தச் சமயம் ராஜலட்சுமி அங்கு வந்தாள். ''மகேன், அவள் துணியை மடித்து வைக்கிறாள். நீ அங்கே உட்கார்ந்து என்ன செய்கிறாய்?'' என்றாள்.

''பாருங்கள், அத்தை: வீணுக்கு என் வேலைகளில் குறுக்கிட்டுப் பொழுதை வீணுக்குகிருர்'' என்ருள் விநோதினி.

''என்னது! நான் அவளுக்கு ஒத்தாசை செய்ய வந்தேனுக்கும்!''

''என் தலையெழுத்து! நீ போய் ஒத்தாசை செய்கிருயாக்கும்! மகேனின் விதமே இதுதானடி! அம்மா, சித்தியிடம் செல்வமாக வளர்ந்துவிட்டான். ஏதாவது ஒரு வேலையாவது அவன் கையால் ஆகுமா?''

இவ்வாறு கூறியதும் தாய் கையாலாகாத மகன்மீது தன் அன்புப் பார்வையை ஓட்டினுள். திறமையற்று எதற்கும் தாயையே எதிர்பார்க்கும் இந்த வயதான குழந்தையை எப்படிச் சுகமாக வைத்துக்கொள்வது என்பதைத்தான் விநோதினியுடன் ராஜலட்சுமி யோசனை கேட்டாள். மகனுக்குப் பணி செய்வதை விநோதினியிடம் கொடுத்துவிட்ட பிறகு அவளுக்கு அந்தக் கவலையே இல்லை. விநோதினியின் மதிப்பு மகேந்திரனுக்குத் தெரிந்துவிட்டது. அவளை நிறுத்திக் கொள்ள அவனுக்கு அக்கறை பிறந்துவிட்டது என்று ராஜலட்சுமி மகிழ்வுற்ருள்.

அவனுக்குக் கேட்கும்படி அவள், ''அடியம்மா! இன்று அவனுடைய துணிகளை யெல்லாம் காயப் போட்டு மடித்து வைத்தாய். நாளைக்கு அவனுடைய புதுக் கைக்குட்டைகளில் பெயர் முதலெழுத்தைப் பூத்தையல் போட்டுவிடு. இங்கே வந்ததுமுதல் உழைக்கத்தான் வேண்டியிருக்கிறது நீ! ஏதாவது உனக்குச் செய்தேனு நான்?'' என்ருள்.

''அத்தை! அப்படியெல்லாம் சொன்னுல், என்னை நீங்கள் வேற்று மனுஷியாக எண்ணுகிறீர்கள் என்றுதான் தோன்று கிறது!''

ராஜலட்சுமி சற்றுக் கொஞ்சலாக, ''உன்னைப்போல் சொந்த மனுஷி யார் கிடைப்பாள் எனக்கு!'' என்ருள்.

விநோதினி துணி மடித்தானதும், ராஜலட்சுமி, ''இப்போது ஜீராவை அடுப்பில் வைக்கட்டுமா, இராவிட்டால் உனக்கு வேறு வேலை இருக்கிறதா?'' என்ருள்.

''இல்லை, அத்தை. வேறு வேலை இல்லை. வாருங்கள்; புட்சணங்களைச் செய்துவிடலாம்.''

''அம்மா, இப்போதுதான் துக்கப்பட்டாய், உழைக்க வைத்தே இவளைச் சாக அடிப்பதாக. அதற்குள் வேலை செய்ய இழுக்கிருயே!'' என்ருன் மகேந்திரன்.

ராஜலட்சுமி விநோதினியின் மோவாயைத் தொட்டு, ''என் செல்வத்துக்கு வேலை என்ருல்தான் பிடிக்கும்'' என்ருள்.

''இன்று சாயங்காலம் எனக்கோ வேலை எதுவும் இல்லை.

அவளோடு ஏதாவது புத்தகம் படிக்கலாம் என்றிருந்தேன்'' என்றான் மகேன்.

''அத்தை, இன்று சாயங்காலம் நாம் இரண்டுபேருமே அவர் படிப்பதைக் கேட்க வரலாமே! என்ன சொல்லு கிறீர்கள்?'' என்றாள் விநோதினி.

'மகேன் ஒன்றியாளாகிவிட்டான். எல்லாரும் அவனை எப்படியாவது தேற்றுவிக்கவேண்டும்' என்று எண்ணினாள் ராஜலட்சுமி. ''சரிதான், மகேனுக்குச் சாப்பாடு தயாரானதும் இரண்டுபேருமே இன்று வரலாம். என்னடா, மகேன்?'' என்றாள் அவள்.

விநோதினி அவனுடைய முகத்தை ஒருதரம் பார்த்துக் கொண்டாள். ''நல்லது'' என்றான் மகேந்திரன். ஆனால் அவனுக்கு இருந்த ஆவல் போய்விட்டது. விநோதினி ராஜ லட்சுமியுடன் சென்றாள்.

''நானும் இன்று வெளியே போகிறேன். நேரங் கழித்துத் தான் வீட்டுக்கு வரவேண்டும்' என்று கோபத்துடன் நினைத்துக்கொண்டான் மகேந்திரன். உடனே வெளியே செல்லும் உடைகளையும் அணிந்தான். ஆனால் தீர்மானப்படி செயலில் ஈடுபடவில்லை அவன். வெகு நேரம் அவன் மாடியில் உலாவினான். படிக்கட்டுப் பக்கம் பலதடவை அவன் பார்வை சென்றது. கடைசியில் அவன் அறையினுள் வந்து உட்கார்ந் தான். 'இன்று பட்சணத்தைத் தொடக்கூடாது. அம்மா விடம் சொல்லிவிட வேண்டும். இவ்வளவு நேரம் ஜீராவை அடுப்பில் காய்ச்சினால் அதில் இனிப்பு எப்படி இருக்கும்!' என்று அவன் தனக்குள் சொல்லிக்கொண்டான்.

சாப்பிடும் வேளையில் விநோதினி ராஜலட்சுமியையும் அழைத்து வந்தாள். இழுப்பு வருமோ என்று அஞ்சி ராஜ லட்சுமி அதிகமாக மாடிக்கு வருவதில்லை. மகேந்திரன் கம்மென்று சாப்பிடலானான்.

''என்ன, ஒன்றுமே சாப்பிடவில்லையே!'' என்றாள் விநோதினி.

ராஜலட்சுமியும் பரபரப்படைந்தாள். ''உடம்புக்கு ஒன்றுமில்லையே?'' என்றாள்.

''எவ்வளவு கஷ்டப்பட்டுப் பட்சணம் செய்தேன்! ஏதா வது சாப்பிட்டுத்தான் ஆகவேண்டும், நன்றாக இல்லையா? சரி, கிடக்கட்டும். நான் சொல்லுகிறேனே என்று பலவந்தமாகத் திணித்துக்கொள்ளாதீர்கள். அவசியமில்லை.''

''நல்ல திண்டாட்டத்தில் சிக்க வைத்தாய். பட்சணம் தின்னத்தான் எனக்கு ஆசை அதிகம்; நன்றாகவும் இருக் கிறது. நீ தடுத்தால் ஏன் கேட்கிறேன்!''

இரண்டு இனிப்பு வகைகளையும் ஒரு துளி விடாமல் சாப்பிட்டான் மகேந்திரன். சாப்பிட்டானதும் மூவருமாக / அவனுடைய படுக்கை அறைக்கு வந்து உட்கார்ந்தார்கள். படிக்கும் பேச்சையே அவன் எடுக்கவில்லை. ராஜலட்சுமி, ''ஏதோ புத்தகம் படிப்பதாகச் சொன்னாயே, ஆரம்பியேன்'' என்றாள்.

''ஆனால் அதில் தெய்வம், க்ஷேத்திரம் எதுவுமே கிடையாதே! உனக்கு அது பிடிக்காது'' என்றான் மகேந்திரன்.

பிடிக்காதா? எப்படியும் பிடிக்க வேண்டும் என்ற உறுதியுடன்தான் இருந்தாள் ராஜலட்சுமி. துருக்கி மொழி படித்தாலுங்கூட அவளுக்கு அது பிடிக்கும்; பாவம் மகேன்! பெண்டாட்டி காசிக்குப் போய்விட்டாள்; தனியாகக் கிடக்கிறான். அவனுக்கு எது பிடிக்கிறதோ, அது அவனுடைய தாயாருக்குப் பிடிக்காமல் இருக்கலாமா!

''ஒன்று செய்யுங்கள். அத்தையின் அறையில் வங்க மொழியில் சாந்தி சதகம் இருக்கிறது. இன்றைக்கு மற்றப் புத்தகங்களை வைத்துவிட்டு அதைப் படியுங்களேன். அத்தைக்கும் பிடிக்கும்; பொழுதும் போகும்'' என்றாள் விநோதினி.

மகேந்திரன் பரிதாபமாக அவளுடைய முகத்தை ஏறிட்டு நோக்கினான். அதற்குள் வேலைக்காரி அங்கு வந்தாள். ''அம்மா, காயஸ்த வீட்டு அம்மா வந்து உங்கள் அறையில் காத்திருக்கிறார்கள்'' என்றாள்.

காயஸ்தர் வீட்டு அம்மாள் ராஜலட்சுமிக்கு நெருங்கிய தோழி. இருட்டினதும், அவளுடன் வம்பாடுவதில் உள்ள மோகத்தை ராஜலட்சுமியால் அடக்க முடிவதில்லை. அப்படி இருந்தும், அவள் வேலைக்காரியிடம், ''இன்று எனக்கு மகேந்திரனிடம் கொஞ்சம் வேலை இருக்கிறது. நாளைக்கு அவசியம் வரச் சொன்னதாகச் சொல்லு'' என்றாள்.

மகேந்திரன் பரபரப்புடன், ''ஏனம்மா, அவர்களைப் பார்த்துவிட்டுத்தான் வாயேன்'' என்றான்.

''வேண்டாம், அத்தை, நீங்கள் இங்கேயே இருங்கள். நான் அந்த அம்மாளிடம் போய்ப் பேசிக்கொண்டிருக்கிறேன்'' என்றாள் விநோதினி.

ராஜலட்சுமியால் வம்பளப்பில் உள்ள மோகத்தை அடக்க முடியவில்லை. ''அம்மா, நீ இங்கே இரு. அவளை அனுப்பிவிட்டு வரமுடியுமா என்று பார்க்கிறேன். நீங்கள் ஆரம்பித்து விடுங்கள். எனக்காகக் காத்திருக்க வேண்டாம்'' என்றாள் அவள்.

ராஜலட்சுமி அறையின் வெளியே சென்றதும் மகேந்திரனால் இருக்க முடியவில்லை. ''ஏன் இப்படி வேண்டுமென்று என்னை வதைக்கிறாய்!'' என்றான்.

விநோதினி வியப்புற்றவள்போல், ''அதென்ன! நாஞ உங்களை வதைக்கிறேன்? உங்கள் அறைக்கு நான் வந்ததே தப்புத்தான் போல் இருக்கிறது; வேண்டாம்; நான் போகி றேன்'' என்று முகம் வாடியவள்போல் எழுந்தாள்.

மகேந்திரன் அவள் கையைப் பிடித்தான். ''இப்படித் தானே என்னை எதிர்த்துப் பொசுக்குகிருய்!'' என்ருன்.

''எனக்கு இத்தனை சக்தி இருப்பது எனக்குத் தெரியாதே! உங்கள் உயிர்கூட மிகவும் கடினமானதுதான். இன்னும் எவ்வளவோ தாங்க முடியும் உங்களால். மிகவும் எரிந்து சாம்பிப் போனவராகத் தெரியவில்லையே, உங்கள் உடம்பைப் பார்த்தால்!''

''உடம்பிலிருந்து என்ன தெரியும்!'', என்று அவன் விநோதினியின் கையைப் பலவந்தமாக இழுத்து மார்பில் வைத்துக்கொண்டான்.

விநோதினி, ''ஆ!'' என்று கூவியதும் மகேந்திரன் பரபரப் புடன் கையை விட்டான். ''வலிக்கிறதா என்ன?'' என்ருன்.

முதல் நாள் காயம் பட்ட விநோதினியின் கையிலிருந்து மறுபடியும் ரத்தம் கொட்டத் தொடங்கியது. மகேந்திரன் வருத்தம் அடைந்தான். ''மறந்துவிட்டேன், ரொம்பத் தவறு; இன்று அதற்கு மருந்து வைத்துக் கட்டுப் போடுகிறேன். விட்டே மாட்டேன்'' என்ருன்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை. மருந்து வேண்டாம் அதற்கு.''

''ஏன் வேண்டாம்?''

''ஏனென்ருல்! என் கையிடம் உங்கள் டாக்டர் கைவரிசை யைக் காட்டவேண்டாம். அது அப்படியே இருக்கட்டும்.''

மகேந்திரன் கணப்பொழுதில் மாறினுன். 'பெண் உள்ளம்! புரியவே வழியில்லை' என்று தனக்குள் கூறிக் கொண்டான் அவன்.

விநோதினி எழுந்தாள். மகேந்திரன் ரோஷத்துடன் தடை செய்யாமல், ''எங்கே போகிருய்?'' என்ருன்.

''வேலை இருக்கிறது'' என்றதும் விநோதினி விடு விடென்று விரைவாகச் சென்ருள்.

கணநேரம் உட்கார்ந்திருந்த மகேந்திரன் விநோதினியை மீண்டும் அழைத்துவர விரைவாக எழுந்தான். படியருகே சென்றதும் அவன் திரும்பி மாடிக்குச் சென்று உலாவத் தொடங்கினுன்.

விநோதினி தினமும் அவனை இழுக்கிருள். அதே சமயம் ஒரு கணம் நெருங்கவும் விடுவதில்லை. பிறரால் தன்னைத் தெரிந்துகொள்ள முடியாது என்று அவன் தற்பெருமை

கொண்டிருந்தான்; இப்போது அவன் அந்த எண்ணத்தை விட்டுவிட்டான். ஆனால் முயற்சி செய்தால் பிறரைத் தன்னால் புரிந்துகொள்ள முடியும் என்றாவது பெருமைப்பட்டுக் கொள்ளக்கூடாதா? அவன் அன்று தோற்றான். ஆனால் அவளைத் தோல்வியுறச் செய்ய அவனால் முடியவில்லை. உள்ளத்தின் மேன்மையில் அவன் தலை நிமிர்ந்து நடந்தான்; தனக்கு நிகர் எவரும் இல்லை என்பதே அவன் துணிபு. ஆனால் அங்கு அவன் அன்று தலை குனிய நேரிட்டது. உயர்வை இழந்தானே தவிரப் பதிலுக்கு ஒன்றும் கிட்டவில்லை. பிச்சைக்காரன்போல் அடைபட்ட கதவின் எதிரே அந்திப் பொழுதில் வெற்றுக் கையுடன் தெருவில் நிற்கவேண்டியதாயிற்று!

பங்குனி - சித்திரை மாதங்களில் விஹாரியின் நிலங்களிலிருந்து வாகைப் பூவின் தேன் வரும். அவன் அதை ராஜலட்சுமிக்கு ஆண்டுதோறும் தவறாமல் அனுப்புவான். அந்த ஆண்டிலும் அவ்வாறே அனுப்பினான் விஹாரி. விநோதினி தேன் புட்டியைத் தானே ராஜலட்சுமியிடம் எடுத்துச் சென்றாள். "அத்தை, விஹாரி பாபு தேன் அனுப்பியிருக்கிறார்" என்றாள்.

ராஜலட்சுமி அதை உக்கிராணத்தில் வைக்கச் சொன்னாள். விநோதினி அவ்வாறே வைத்தபின் ராஜலட்சுமியின் அருகில் வந்து உட்கார்ந்தாள். "விஹாரி பாபு உங்களைப்பற்றி விசாரிக்காமல் இருப்பதே இல்லை. பாவம், பெற்ற தாய் இல்லை; அதனால் நீங்கள்தான் தாய்போல் இருக்கிறீர்கள்" என்றாள்.

விஹாரியை மகேந்திரனுடைய நிழலாக எண்ணினாளே தவிர, ராஜலட்சுமி அவனைப்பற்றித் தனியாக யோசித்தவளல்ல. அவர்களுக்குக் கிடைத்த மிக அநுசரணையான ஆள் அவன். ராஜலட்சுமியைத் தாயற்ற விஹாரியின் அன்னை என்று விநோதினி குறிப்பிடவே, அது அவளுடைய இதயத்தைத் தொட்டது. 'உண்மைதானே! விஹாரிக்குத் தாயார் இல்லை. அவன் என்னையே அம்மாவாக எண்ணுகிறான்' என்று திடீரென்று அவளுக்குத் தோன்றியது. நோயிலும், வருத்தத்திலும், கஷ்டத்திலும் விஹாரி எவரும் கூப்பிடாமலேயே யாதொரு ஆடம்பரமுமின்றி ஓசைப்படாமல் வந்து அக்கறையுடன் பணிவிடை செய்தான். மூச்சு வெளிவிட்டு உள்ளிழுப்பதுபோல் சகஜமாகவே ராஜலட்சுமியும் அதை ஏற்றுக்கொண்டாள். அதற்காக நன்றி பாராட்டுவது என்ற நினைவே அவளுக்கு உதயமாகவில்லை. ஆனால் விஹாரியைப்பற்றி யார் கவலைப்பட்டார்கள்! அன்னபூரணி இருந்தபோது அவள் ஓரளவு அவனைக் கவனித்து வந்தாள். 'விஹாரியை வசப்படுத்திக்கொள்ளவே அன்னபூரணி ஆடம்பரமாக அவனை கவனிக்கிறாள்!' என்றுதான் அப்போது ராஜலட்சுமிக்குத்

தோன்றும். ராஜலட்சுமி பெருமூச்செறிந்து, "விஹாரி எனக்குச் சொந்தப் பிள்ளை போலத்தான்" என்றாள்.

இதைச் சொன்னதும், விஹாரி சொந்தப் பிள்ளையையும் விட உயர்வு என்று அவளுக்குத் தோன்றியது. கைம்மாறு எதிர்பாராமலேயே அவர்களிடம் அவன் அக்கறை காட்டினான். இதை நினைக்கும்போது அவள் உள்ளத்தினுள் மீண்டும் பெருமூச்சு எழுந்தது.

"உங்கள் கையால் சாப்பிடுவது என்றால் விஹாரி பாபுவுக்கு ரொம்ப ஆசை" என்றாள் விநோதினி.

அன்பும் பெருமையும் கலந்த குரலில் ராஜலட்சுமி, "வேறு யார் சமைத்தாலும் அவனுக்கு ருசிக்காது" என்றாள். வெகு நாளாக விஹாரி வரவில்லை என்ற நினைவும் அப்போது அவளுக்கு எழுந்தது. "ஆமாம், விஹாரி இப்போதெல்லாம் வருவதில்லையே! ஏன்?" என்றாள் அவள்.

"நான்கூட அதைத்தான் யோசித்துக் கொண்டிருந்தேன். அத்தை, உங்கள் பிள்ளை என்னவோ கல்யாணமானதுமுதல் பெண்டாட்டியுடன் மோகத்தில் கிடந்தார். உற்றார் உறவினர் வந்துதான் என்ன செய்வார்கள்?"

இது நடக்கக் கூடியது என்றுதான் ராஜலட்சுமிக்குத் தோன்றியது. பெண்டாட்டி மோகத்தில் மகேந்திரன் தனக்கு நல்லது செய்பவர்களை யெல்லாம் ஒதுக்கிவிட்டான்.

விஹாரிக்கு ரோஷம் வருவதில் என்ன தவறு! அவன் ஏன் வரவேண்டும்? விஹாரியும் தன்னைப் போலத்தான் என்று எண்ணவும், ராஜலட்சுமிக்கு அவன்மேல் பரிவு உண்டாயிற்று. விஹாரி சுயநலம் பாராது சிறு பிராயமுதல் மகேந்திரனுக்கு எத்தனையோ உதவிகள் செய்திருக்கிறான். அவனுக்காக எத்தனையோ தடவை கஷ்டங்களை அநுபவித்திருக்கிறான். இதையெல்லாம் அவள் விநோதினிக்கு எடுத்துச் சொன்னாள். பிள்ளையின்மேல் தனக்கு இருந்த குறைகளை எல்லாம் விஹாரியின் வரலாற்றைக் கூறும் வாயிலாக உறுதிப்படுத்தினாள். பெண்டாட்டி வந்த இரண்டு நாட்களுக்குள் நெடுநாள் உடன்பழகிய நண்பனை அலட்சியம் செய்தால் குடும்பத்தில் நியாயம் எப்படி நிலைக்கும்!

"நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை. விஹாரி பாபுவை அழைத்துச் சாப்பிடச் சொன்னால் அவருக்குச் சந்தோஷமாக இருக்கும்" என்றாள் விநோதினி.

"நல்லதுதான். மகேனைக் கூப்பிட்டால், அவனே விஹாரியை வரவழைப்பான்."

"இல்லை, அத்தை: நீங்களே கூப்பிடுங்கள்."

"உன்மாதிரி எனக்கு எழுதப் படிக்கத் தெரியுமா என்ன?"

''இருந்தால் என்ன! உங்களுக்காக நானே வேண்டு மானால் எழுதுகிறேன்.''

விநோதினி ராஜலட்சுமியின் பெயரால் தானே விஹாரிக்குக் கடிதம் எழுதி அனுப்பினாள். ஞாயிற்றுக்கிழமையை மகேந்திரன் மிக்க ஆவலுடன் எதிர்நோக்குவான். முதல் நாளிரவிலிருந்தே அவன் மனம் கற்பனைகளில் ஈடுபட்டுவிடும். இதுவரையில் அவன் கற்பனை செய்தபடி எதுவும் நடக்கவில்லை; என்றாலும், ஞாயிற்றுக்கிழமையன்று விடியலின் ஒளி அவன் கண்களுக்கு இனிமையாகத் தோன்றும். விழிப்புற்ற நகரத்தின் சந்தடி யாவும் அவன் செவிக்கு அபூர்வமான இன்னிசை போலவே கேட்கும்.

ஆனால் அன்று என்ன விசேஷமோ! ஏதாவது நோன்பு இருக்கவேண்டும் அம்மாவுக்கு.' மற்ற நாட்களைப் போல் விநோதினியின் கையில் பொறுப்பை விட்டு அவள் ஓய்வுடன் இல்லை. அன்று அவளே ஓடியாடி வேலை செய்தாள்.

இந்தக் கலவரத்தில் மணி பத்தாகி விட்டது. இதனிடையே மகேந்திரன் எவ்வளவோ முயன்றும் ஒரு கணங்கூட விநோதினியைத் தனிமையில் பார்க்க முடியவில்லை. புத்தகம் படிக்கலாமென்றால் அதில் மனம் செல்லவில்லை. பத்திரிகையில் அவசியமற்ற ஒரு விளம்பரத்தைக் கால்மணி நேரம் பார்த்தான். கடைசியில் இருப்புக் கொள்ளாமல் அவன் கீழே வந்தான். அங்கு வராந்தாவில் அடுப்பில் ஏதோ சமைத்துக் கொண்டிருந்தாள், ராஜலட்சுமி. இடுப்பில் புடைவைத் தலைப்பைச் செருகிக்கொண்டு அதற்குத் தேவையானவற்றைத் தருவதில் விநோதினி முனைந்திருந்தாள்.

''என்ன விசேஷம் இன்று, பலமாக இருக்கிறதே ஏற்பாடெல்லாம்!'' என்றான் மகேந்திரன்.

''உனக்கு அவள் சொல்லவில்லையா? இன்று விஹாரிக்கு விருந்து'' என்றாள் ராஜலட்சுமி.

விஹாரிக்கு விருந்து என்றதுமே மகேந்திரனுக்கு உடம்பெல்லாம் எரிச்சல் பிறந்தது. ''ஆனால், என்னால் இருக்க முடியாதே, அம்மா'' என்றான் அவன்.

''ஏன்?''

''நான் வெளியே போகவேண்டுமே!''

''சாப்பிட்டுவிட்டுப் போயேன், அதிக நேரமாகாது.''

''எனக்கு வெளியே விருந்து'' என்றான்.

விநோதினியின் பார்வை கணநேரம் மகேந்திரனின் முகத்தில் விழுந்தது. ''விருந்துக்கு அழைப்பிருந்தால் போகட்டுமே, அத்தை. இன்று விஹாரி பாபு தனியாகத்தான் சாப்பிட்டுவிட்டுப் போகட்டும்!'' என்றாள் அவள்.

ஆனால் தான் சமைத்ததை மகேன் சாப்பிடாமல் போவது ராஜலட்சுமிக்கு எப்படிப் பொறுக்கும்? அவள் வேண்ட வேண்ட, மகேனின் பிடிவாதமும் அதிகரித்தது. ''மிகவும் அவசியமான அழைப்பு. தட்டவே முடியாது. விஹாரியைக் கூப்பிடுவதற்கு முன் என்னைக் கேட்டிருப்பதுதானே!'' என்றெல்லாம் குறுக்குக் கேள்விகள் போட்டான் அவன்.

கோபம் கொண்ட மகேந்திரன் தன் தாயை இவ்வாறு தண்டிக்க முனைந்தான். ராஜலட்சுமியின் களிப்பெல்லாம் பறந்தது. சமையலை விட்டுப் போய்விடலாமென்று அவளுக்குத் தோன்றியது. ''அத்தை, நீங்கள் ஒன்றும் கவலைப்பட வேண்டாம். அவர் அப்படி வீம்புக்குத்தான் சொல்லுகிறார். அவர் இன்று விருந்துக்குச் செல்லமாட்டார்'' என்றாள் விநோதினி.

ராஜலட்சுமி தலையசைத்தாள்: ''இல்லையம்மா, உனக்கு மகேனுடைய குணம் தெரியாது. அவன் பிடித்ததை விடவே மாட்டான்'' என்றாள். ஆனால் தாயைவிட விநோதினிக்கு மகேனுடைய இயல்பு தெரியுமென்று புலனாகியது. விஹாரியை அழைத்தது விநோதினிதான் என்று மகேந்திரனுக்குத் தெரிந்துவிட்டது! இதனால் அவனுடைய உள்ளத்தினுள் பொறாமை கனிந்தது. அவனால் விலகிச் செல்ல முடியாமல் போயிற்று. விஹாரி, விநோதினி இவர்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்க்காமல் அவனால் உயிருடன் இருக்க எப்படி முடியும்! பார்த்தால் வயிறுதான் பற்றி எரியும். ஆனால் பார்க்க வேண்டியதும் அவசியந்தானே!

பல நாட்கள் கழிந்த பின்னர் அழைப்புப் பெற்ற விஹாரி விருந்தினனாக அந்தப்புரத்தினுள் வந்தான். இளமைமுதல் பழகிய அறை. அங்கு வீட்டுப் பிள்ளைபோல் தடையின்றி ஓடி விளையாடியவன் அவன். அதன் வாயிலருகே வந்ததும் அவன் ஒரு கணம் திடுக்கிட்டு நின்றான். புலம்பல் ஒன்று இமைப் பொழுதில் மேலெழுந்த வாரியாக அவனது மார்புக் கதவத்தை மோதியது. அதை அடக்கிக்கொண்டு, அவன் புன்னகையுடன் உள்ளே சென்றான். அப்போதுதான் குளித்திருந்த ராஜலட்சுமியை வணங்கிப் பாததூளியைக் கண்களில் ஒற்றிக் கொண்டான். விஹாரி முன்பெல்லாம் அடிக்கடி வரும்போது இப்படிச் செய்வது வழக்கமில்லை. தான் எங்கேயோ தொலைவில் உள்ள ஊருக்குப் போய் மீண்டும் வீட்டுக்குத் திரும்பியது போல் இருந்தது அவனுக்கு. விஹாரி வணங்கி எழும் போது ராஜலட்சுமி அன்புடன் அவன் தலையில் ஆசி தந்தாள்.

ஆழ்ந்த பரிவு காரணமாக அன்று ராஜலட்சுமி விஹாரியிடம் அதிக ஆதரவும் அன்பும் காட்டினாள். ''ஏனடா விஹாரி, இத்தனை நாட்களாக ஏன் வரவில்லை? தினமும்.

இன்று வருவான், இன்று கட்டாயம் வருவான் என்று எதிர்பார்த்திருப்பேன். ஆனால் உன்னைக் காணவில்லையே!'' என்றாள்.

விஹாரி சிரித்தான். ''தினமும் வந்தால் நீ என்னை எங்கே நினைக்கப் போகிறாய்! மகேன் அண்ணா எங்கே?'' என்றான்.

ராஜலட்சுமியின் முகம் வாடியது. ''இன்று அவனுக்கு எங்கேயோ விருந்து; அதனால்தான் அவனால் இருக்க முடியவில்லை'' என்றாள்.

இதைக் கேட்டதும் விஹாரியின் மனத்திலும் மாறுதல் ஏற்பட்டது. சிறு பருவமுதல் பழகிய தோழமையின் முடிவு இது! ஒரு நெட்டுயிர்ப்புடன் தன் மனத்திலிருந்த வேதனையையெல்லாம் அகற்ற முயன்றான். இன்று என்ன சமையல் என்று அவன் தனக்குப் பிடித்த உணவு வகைகளைப்பற்றி விசாரித்தான். ராஜலட்சுமி சமைக்கும் நாட்களில் விஹாரி ஆடம்பரமாகத் தான் சாப்பாட்டுராமன் என்று காட்டிக்கொள்வான்; சாப்பிடுவதில் ஆவல் காட்டி அவன், தாயுள்ளம் படைத்த ராஜலட்சுமியின் அன்பைப் பெறுவது வழக்கம். அன்றும் தான் சமைத்த பண்டங்களைப்பற்றி விஹாரியின் ஆவலைக் கண்டு ராஜலட்சுமி சிரித்துக்கொண்டே அந்தச் சாப்பாட்டுராமனுக்கு உறுதி அளித்தாள்.

இதே சமயம் மகேந்திரன் வந்து வறண்ட குரலில் விஹாரியை வழக்கம்போலக் கேட்டான்: ''என்ன, விஹாரி, எப்படி இருக்கிறாய்?''

''ஏனடா மகேன்! விருந்துக்குப் போகவில்லையா?'' என்றாள் ராஜலட்சுமி.

மகேந்திரன் தன் அசட்டுத்தனத்தை மறைக்க முயன்றான். ''இல்லை. போக வேண்டாமென்று விட்டுவிட்டேன்'' என்றான்.

குளித்துவிட்டு விநோதினி அங்கு வந்தபோது, முதலில் விஹாரி ஒன்றுமே பேசவில்லை. விநோதினியும், அப்போது மகேந்திரனுடைய முகம் இருந்த மாதிரியை மனத்தில் பிடித்து வைத்துக்கொண்டாள். அவள் விஹாரிக்குச் சற்று அருகில் வந்து, ''என்ன விஹாரி பாபு! அடையாளமே தெரியவில்லையா என்ன!'' என்றாள்.

''எல்லோரையும் புரிந்துகொள்ள முடியுமா?'' என்றான் விஹாரி.

''கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் தெரியும்!'' என்றதும், அவள் ராஜலட்சுமியின் பக்கம் திரும்பினாள். ''அத்தை, சாப்பாடு சித்தமாகிவிட்டது'' என்றாள்.

மகேனும் விஹாரியும் சாப்பிட உட்கார்ந்தனர். ராஜலட்சுமி சற்றுத் தொலைவில் உட்கார்ந்துகொள்ளவும், விநோதினி உணவு வகைகளைப் பரிமாறலானாள். மகேனுக்கு

உண்பதில் மனம் செல்லவில்லை. உணவு பரிமாறுவதில் உள்ள பட்சபாதத்தை ஊன்றிக் கவனித்தான் அவன். விஹாரிக்கு உணவு அளிப்பதில் விநோதினிக்கு ஒரு மகிழ்ச்சி உண்டாவதை அவன் கவனிக்கத் தவறவில்லை. விஹாரியின் இலையிலேயே அதிகப்படி தின்பண்டங்களும் தயிர்க்கட்டியும் பரிமாறப் பட்டன. இதற்கு ஒரு சரியான சாக்கும் இருந்தது. மகேன் வீட்டுப் பிள்ளை. விஹாரி விருந்தாளி அல்லவா! ஆனால் வாய் திறந்து குறை கூறும்படி சரியான காரணங்கள் எதுவும் அமைய வில்லை. அதனால் மகேனுடைய எரிச்சல் பின்னும் அதிகரித்தது. அன்றைக்கென்று விசேஷமாகக் கிடைத்த உயர்தர மீன் ஒன்றை விநோதினி விஹாரிக்கு இடச் சென்றபோது அவன், "மகேன் அண்ணாவுக்குப் போடு. அவனுக்குப் பிடிக்கும்" என்றான். மகேனுக்கு ரோஷம் பொத்துக்கொண்டு வந்தது: "எனக்கு வேண்டாம். அது வேண்டாம்" என்று அவன் சொல்லவே, மறு பேச்சின்றி அந்த மீனை விஹாரியின் இலையில் இட்டாள் விநோதினி.

உணவருந்திய பின்னர் நண்பர்கள் இருவரும் அறையை விட்டு வெளியே வந்தபோது விநோதினி பரபரப்புடன் வந்து, "விஹாரி பாபு, இப்போதே போகாதீர்கள். மேலே அறையில் கொஞ்சம் பேசவேண்டும்" என்றாள்.

"நீ சாப்பிடப் போகவேண்டாமா?"

"இல்லை, இன்று ஏகாதசி."

கொடிய ஏளனத்தின் அறிகுறியாக அவன் நமுட்டுச் சிரிப்புச் சிரித்தான். அதன் பொருள்: 'ஓ, ஏகாதசி விரதங்கூட உண்டா! ஆசாரத்துக்குக் குறைவில்லை!' என்பதுதான்.

அந்தச் சிரிப்பும் அவள் கண்களில் படாமல் போகவில்லை. இருந்தும் அவள் கையில் பட்ட காயத்தைப்போல் இதையும் பொறுத்துக்கொண்டாள். மிகவும் கெஞ்சும் குரலில் அவள், "என் தலையைத் தின்றாற்போல்; கொஞ்சநேரம் பேசலாம் வாருங்கள்" என்றாள்.

அவசியமான காரணமின்றித் திடீரென்று எரிந்து விழுந் தான் மகேந்திரன்: "உங்களுக்கு என்ன அறிவு கிடையாதா! வேலைவெட்டி கிடக்கட்டும்; இஷ்டம் இருக்கிறதோ இல்லையோ, பேசவேண்டியதுதான். இத்தனை பரிவுக்கு ஏதாவது அர்த்தம் இருக்கிறதா?"

விநோதினி உரத்துச் சிரித்தாள். "விஹாரி பாபு, உங்கள் மகேன் அண்ணா சொல்வதைக் கேளுங்களேன். பரிவு என் பதற்குப் பரிவு என்றுதான் அர்த்தம்? அகராதியில் அதற்கு இரண்டாவது பொருள் இல்லையே!" மகேந்திரன் பக்கம் திரும்பி, "என்னதான் சொல்லுங்கள், செல்லம் கொடுப்பதன்

பொருள் இன்றுமுதல் உங்களுக்குத் தெரிந்த அளவு தெளி வாக எவருக்குமே தெரியாது.''

''மகேன் அண்ணு, ஒரு விஷயம்; கொஞ்சம் கேள்'' என்று விஹாரி, விநோதினியிடம் விடைகூடச் சொல்லிக் கொள்ளாமல் அவனுடன் வெளியே சென்ருன். விநோதினி வராந்தாவின் கிராதியைப் பிடித்துக்கொண்டு வெறிச்சென்ற முற்றத்தையே பார்த்தவாறு நின்ருள்.

விஹாரி வெளியே வந்ததும், ''மகேன் அண்ணு! நமது நட்பு இத்துடன் முடியுத்தான் வேண்டுமா? எனக்கு இது தெரிய்வேண்டும்'' என்ருன்.

மகேந்திரனுடைய உள்ளம் பற்றி எரிந்தது. அப்போது, மின்னல்போல் விநோதினியின் ஏளனச் சிரிப்பு அவனுடைய மூளையின் மூலேக்கு மூலே ஊடுருவியது. ''சமாதானத்துக்கு வந்தால் உனக்கு அதனுல் சௌகரியம் உண்டாகலாம். ஆனுல் எனக்கு அது அவ்வளவு வேண்டியதாகப் படவில்லே. என் குடும்பத்தினுள் வெளிமனிதர் நுழைவது எனக்குப் பிடிக்க வில்லே. அந்தப்புரம் அவ்வாறுதான் இருக்கவேண்டுமென்று என் அவா'' என்ருன் மகேந்திரன்.

விஹாரி மேலே பேசாமல் வெளியே சென்ருன்.

பொருமை சுட்டெரித்தது மகேந்திரனே. விநோதினியைப் பார்க்கவே கூடாது என்று ஒரு முறை உறுதி செய்துகொண் டான். உடனேயே அவளேக் காணுவதற்காக எதிர்பார்த்து மேலும் கீழும், உள்ளும் வெளியும் பரபரப்புற்று உலாவத் தொடங்கினுன்.

29

ஆசா, அன்னபூரணியிடம் ஒரு நாள், ''ஏன், பெரி யம்மா, உனக்குப் பெரியப்பாவை நினைவு இருக்கிறதோ?'' என்று கேட்டாள்.

''அம்மா! பதினேராவது வயதில் நான் கைம்பெண்ணுகி விட்டேன். அவர் முகம் நிழலேப் போல் நினைவிருக்கிறது.''

''பெரியம்மா! பின் எவரைப்பற்றி எண்ணிக்கொண் டிருக்கிருய்?''

அன்னபூரணி சற்றுச் சிரித்தாள். ''என் புருஷர் எவ ருடன் ஒன்றுபட்டாரோ, அந்தத் தெய்வத்தைப்பற்றித்தான் எண்ணமிடுகிறேன்'' என்ருள்.

''அதனால் உனக்கு நிம்மதி உண்டா?''

அன்னபூரணி ஆதரவுடன் ஆசாவின் கூந்தலைக் கோதினாள். ''என் மனத்தை உன்னால் எப்படி உணரமுடியும், அம்மா? அது என் மனத்துக்குத் தெரியும். யாரைப்பற்றி நான் எண்ணுகிறேனோ அவருக்குத்தானே அது தெரியும்!'' என்றாள்.

ஆசா தனக்குள் எண்ணமிடலானாள்: 'இராப்பகலாக நான் நினைக்கிறேனே, அவருக்கு என் உள்ளக் கிடக்கை தெரியுமா? என்னால் சரிவரக் கடிதம் எழுத முடியவில்லை. அதற்காக அவரும் ஏன் எனக்கு எழுதுவதை நிறுத்திவிட வேண்டும்?' சில நாட்களாக அவளுக்கு மகேந்திரனிடமிருந்து கடிதம் எதுவும் வரவில்லை. 'தோழிமட்டும் என்னுடன் இருந்தால், என் மனத்தில் இருப்பதைச் சரியாக எழுதியிருப்பாளே!' என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டாள் ஆசா.

சரிவர எழுதத் தெரியாத தன் கடிதம் புருஷனிடம் மதிப்புப் பெறுது என்று எண்ணிய அவளுக்குக் கடிதம் எழுதவே கைவராது. ஒழுங்காக எழுதவேண்டுமென்று அவள் கஷ்டப்பட்டால் அத்தனைக்கத்தனை எழுத்துக்கள் கோணலாகவே வரும். தன் மனத்திலுள்ளதைத் தெளிவாகக் கோத்து எழுத முயலும்போதெல்லாம் வரிகள் முற்றுப்பெறுமலேயே நிற்கும். 'அன்புள்ளவருக்கு' என்று எழுதிக் கையொப்பம் இட்டாலேயே உள்ளத்தை உணரும் வல்லமை பெற்று மகேந்திரன் எல்லா விஷயங்களையும் தெரிந்துகொள்வதானால் ஆசாவுக்குக் கடிதம் எழுதுவதன் பலன் முழுவதும் கிடைத்துவிடுமே! இத்தனை காதலை அளித்த அந்தப் படைப்போன் அதை வெளிப்படுத்த ஓரளவு மொழியறிவும் அளிக்காதது ஏனோ?

கோயிலில் அந்தி வேளைத் தீபாராதனையைக் கண்டு திரும்பியதும் ஆசா பெரியம்மாவின் காலருகே உட்கார்ந்து அவளுடைய பாதங்களை மெல்ல வருடினாள். வெகு நேரம் மௌனமாகவே கழிந்தது. பின்னர் ஆசா, ''பெரியம்மா! புருஷரைத் தெய்வமாக எண்ணி வழிபடுவது பெண்களின் கடமை என்றாய். ஆனால் அறிவற்று முரட்டுக் குணம் படைத்த பெண் - கணவனுக்குச் சரிவரப் பணி செய்யத் தெரியாத பெண் - என்ன செய்வது?'' என்று கேட்டாள்.

அன்னபூரணி சற்று நேரம் ஆசாவின் முகத்தையே நோக்கினாள். பின்னர் அடக்கிய பெருமூச்சை வெளிவிட்டாள். ''அம்மா, நானும் முட்டாள்தான். அப்படியும் தெய்வ வழிபாடு செய்யவில்லையா?'' என்றாள்.

''அவருக்கு உன் மனம் தெரியும்; அதனால் திருப்தி அடைகிறார். ஆனால், முட்டாளின் பணிவிடை கணவருக்குப் பிடிக்கவில்லை என்று வைத்துக்கொள்..?''

''எல்லோரையும் திருப்திப்படுத்தும் திறமை எவருக்குமே கிடையாது, அம்மா. ஒரு பெண் உள்ளூற அக்கறையுடன், அன்பும் பண்பும் கூடிக் கணவனுக்குப் பணிவிடையுடன், குடும்பக் காரியங்களையும் கவனித்து வந்தால், கணவன் உதறிவிட்டாலுங்கூடத் தெய்வம் அதை ஏற்றுக் கொள்ள முன் வரும்.''

ஆசா பதில் கூறுமல் கம்மென்றிருந்தாள். பெரியம்மாவின் சொற்களைக் கொண்டு ஓர் ஆறுதல் பெற அவள் முயன்ருள். ஆனுல் கணவனே துச்சமாகக் கருதித் தள்ளியதைத் தெய்வம் ஏற்றுக்கொள்ளுமென்று அன்னபூரணி சொன்னதை அவள் மனம் ஒப்புக்கொள்ளவில்லை.

அவள் குனிந்த தலையுடன், பெரியம்மாவின் கால்களைத் தடவினுள்.

அன்னபூரணி ஆசாவின் கையைப் பற்றித் தன்னருகில் இழுத்து உச்சி மோந்தாள். துக்கத்தால் அடைத்துப்போன தொண்டையைச் சிரமப்பட்டுச் சரிப்படுத்திக்கொண்டாள். ''சுனி! துக்கமோ, கஷ்டமோ அதை அநுபவித்துக் கற்றுக் கொள்ள வேண்டும். காதில் கேட்பதனுல் அது வந்துவிடாது. உன் பெரியம்மாகூட ஒரு நாள், உன்போல் வயதில் இது போலவே குடும்பத்தில் பெரிய கொடுக்கல் வாங்கல் செய்து உறவாடியவள்தான். அப்போது நான்கூட உன்னைப்போலத் தான் எண்ணினேன். 'நான் பணிவிடை செய்தால், அவருக்கு ஏன் திருப்தி வராது? பூஜை செய்த தெய்வத்தின் பிரசாதம் எனக்கு எவ்வாறு கிடைக்காமல் போகும்? எவருடைய நன்மையைக் கோருகிறேனே, அவர் நான் செய்வதைச் சரியென்று ஏற்க மாட்டாரா?' என்றெல்லாம் எண்ணினேன். ஆனுல் ஒவ்வோர் அடியிலும் நான் எண்ணியபடி நடவாது என்று கண்டேன். கடைசியில் ஒரு நாள் எனக்குப் பொறுக்க முடியாமல் போயிற்று. உலகில் எல்லாம் வீணுகி விட்டதாகத் தோன்றவே குடும்பத் தொல்லையை விட்டு விலகினேன். ஆனுல் என்னுடைய எண்ணம் எதுவும் வீணுகவில்லை என்று உணர முடிகிறது இப்போது. அம்மா! உலகத்தில் வியாபாரம் செய்யும் உண்மையான வியாபாரி, இந்த உலகச் சந்தையில் கடன் அளிக்க வல்ல ஒரே ஆள், நான் புரிந்த பணிகளை எல்லாம் ஏற்றுக்கொண்டார். என் உள்ளத்தில் அமர்ந்து அவர் இன்று அதை ஒப்புக்கொள்ளவும் செய்கிருர். அப்போது ஏனே அது எனக்கு விளங்கவில்லை. அவருக்காக நான் குடும்ப அலுவல்களைச் செய்திருந்தால், அவருக்கே அளிப்பதாக எண்ணிக் குடும்பத்தில் மனத்தைச் செலுத்தியிருந்தால் அன்று எவராலும் எனக்கு வேதனை ஏற்பட்டே இராது.''

ஆசா, அன்றிரவு படுக்கையில் பலவாறாக எவ்வளவோ விஷயங்களைக் குறித்து எண்ணமிட்டாள். ஆனால் எதுவும் அவளுக்கு விளங்கவில்லை. ஆனால் புண்ணியவதியான பெரியம்மாவிடம் அவளுக்குப் பக்தி அதிகம். அவள் சொன்னது முழுவதும் புரியாவிட்டாலும், தலைமேல் ஏற்றுக்கொள்ள அவள் தயங்கவில்லை. குடும்பம், உலகம் இவற்றுக்கு மேலாகத் தன் இதயத்தில் பெரியம்மா எவருக்கு இடம் அளித்து வந்தாளோ அவரை, மனப்பூர்வமாகப் படுக்கையில் எழுந்து உட்கார்ந்து வணங்கினாள். 'நான் அறியாதவள். உங்களைத் தெரியாது. என் கணவரையே எனக்குத் தெரியும். அதைக் குற்றமாகக் கருதவேண்டாம். நான் என் கணவருக்குப் பணி புரிவதை ஏற்றுக்கொள்ளும்படி நீங்கள்தான் அவருக்கு எடுத்துச் சொல்லவேண்டும். அவர் அதைக் காலால் உதைத் துத் தள்ளினால் என்னால் உயிருடன் இருப்பது முடியாது. பெரியம்மாவைப்போல் நான் புண்ணியம் செய்தவளல்ல. உங்களை ஊன்றுகோலாகக் கொண்டு என்னால் பிழைக்க முடியாது'' என்று ஆசா பல முறை படுக்கையிலிருந்தே வணங்கினாள்.

ஆசாவின் பெரியப்பா திரும்பிச் செல்லும் நாள் வந்தது. விடைபெறும் முன்னர், அந்தி வேளை அன்னபூரணி ஆசாவைத் தன் பக்கத்தில் இருத்திக்கொண்டாள். ''சுனி! என் கண்ணே! குடும்பத்தின் துயரம், வேதனை, கஷ்டச்சுழல்களிலிருந்து எப் போதும் கட்டிக் காக்க எனக்கு வல்லமை இல்லை. எப்போது எந்தவிதமான கஷ்டம் எங்கிருந்து வந்தாலும் சரி, உன் பக்தியை, நம்பிக்கையை நிலைத்து வைத்துக்கொள். உன் கடமை தளரக்கூடாது, இதுதான் நான் உனக்குச் சொல்லும் அறிவுரை'' என்றாள்.

ஆசா அவளை வணங்கிப் பாத தூளியை ஏற்றுக்கொண் டாள். ''நீ ஆசி கூறு, பெரியம்மா! அவ்வாறே நடக்கிறேன்'' என்றாள்.

30

ஆசா திரும்பிவிட்டாள். விநோதினிக்கு அவள்மேல் கோபம் அதிகம். ''ஏனடி, இத்தனை நாட்கள் இருந்தாயே வெளியூரில், ஒரு கடிதம் எழுதக்கூடாதா?'' என்றாள்.

''நீதான் எத்தனை எழுதினுயாம்!'' என்றாள் ஆசா.

''நான் ஏன் முதலில் எழுதவேண்டும்? நீதானே எழுதுவதாகப் பேச்சு.''

ஆசா விநோதினியின் கழுத்தைக் கட்டிக்கொண்டு தன் பிழையை ஒப்புக்கொண்டாள். ''உனக்குத்தான் தெரியுமே, எனக்கு ஒழுங்காக எழுத வராது. அதுவும் உன்னைப்போல் ஒரு பண்டிதைக்கு எழுதுவது என்றால் எனக்குக் கூச்சமாக இருந்ததடி'' என்றாள்.

சற்று நேரத்துக்கெல்லாம் தோழியரின் சச்சரவு ஓய்ந்து, பழைய நட்புத் தலை தூக்கியது. ''இராப்பகல் பாராமல் நீ கூடவே இருந்து உன் புருஷருக்கு ஒரு கெட்ட வழக்கத்தை உண்டாக்கி விட்டாய். ஒருவர் எப்போதும் பக்கத்தில் இரா விட்டால் முடிவதே இல்லையே!'' என்றாள் விநோதினி.

''அதனால்தானே நான் உன்மேல் பொறுப்பைச் சுமத்தினேன்! எப்படித் தோழமை கொண்டாடுவது என்பது என்னை விட உனக்கு நன்றாகத் தெரியுமே!''

''பகல் பொழுது காலேஜுக்கு அனுப்பிவிட்டு ஒருவாறு நிம்மதியாக இருப்பேன். ஆனால் விளக்கு வைத்தால் போதும்; விட்டால்தானே! கதை பேசலாம், புத்தகம் படிக்கலாம் என்று ஓயாத தொந்தரைதான், போயேன்.''

''நன்றாக வேண்டும் உனக்கு! ஆட்களை மயக்கும் சக்தி உனக்கு இருக்கிறது. அவர்கள்தான் உன்னை எப்படி விடுவார்கள்!''

''பத்திரம்! அவர் ஓரொரு சமயம் செய்வதைப் பார்த்தால், எனக்கே வசியவித்தை தெரியுமோ என்று சந்தேகமாக இருக்கிறது.''

''உன்னைத் தவிர வேறு யாருக்குத் தெரியுமாம் வசிய வித்தை! உனக்குத் தெரிந்ததில் ஒரு துளி எனக்குத் தெரிந்தாலும் போதுமே! பிழைத்துப் போவேனே.''

''ஏனோ! யாரை நாசமடிக்கப் போகிறாய்! வீட்டில் இருப்பதைக் கவனித்துக்கொள். பிறத்தியாரை மயக்கும் வேலை உனக்கு வேண்டாமடி; பெருந்தொல்லை!''

ஆசா, விநோதினியை மிரட்டினாள்: ''என்னடி என்னவெல்லாமோ பேசுகிறாயே....''

ஆசா காசியிலிருந்து வந்ததும் முதல் தடவை பார்க்கையில் மகேந்திரன், ''ஏது! நன்றாக இருந்திருப்பாய் போல் இருக்கிறது. உடம்பு கட்டுக்குண்டாக இருக்கிறதே!'' என்றான்.

ஆசாவுக்கு வெட்கமாக இருந்தது. அவளுடைய உடம்பு இவ்வளவு ஆரோக்கியமாக இருந்திருக்கக்கூடாது. ஆனால் ஆசா அறிவற்றவள். அவளுக்கு எதுவும் சரியாகத் தெரியாது. மனம் இவ்வளவு கஷ்டப்பட்டு அலைந்தபோதும் பாழான உடம்பு மாத்திரம் இவ்வாறு பருத்துவிட்டதே! மனத்தில் இருப்பதை எடுத்துச் சொல்ல வார்த்தை வரமாட்டேனென்கிறது. இந்த உடம்பு வேறு இப்படி நேர் எதிராக நடந்துகொள்கிறதே!

ஆசா மெதுவாக, ''நீங்கள் எப்படி இருந்தீர்கள்?'' என்றாள்.

முன்பெல்லாம் இதற்கு மகேந்திரன் கேலியும் உண்மையும் கலந்து, ''செத்தேன் போயேன்'' என்பான். இப்போது அவனால் கேலியாகப் பேச முடியவில்லை. தொண்டை வரையில் வந்து அது தடைப்பட்டது. ''நன்றாகத்தான் இருந்தேன். மோசமாக ஒன்றுமில்லை'' என்றான்.

முன்பு இருந்ததைவிட மகேந்திரன் பின்னும் இளைத்திருப்பதாக ஆசாவுக்குப் பட்டது. அவன் முகம் வெளுத்துக் கிடந்தது. கண்களில் ஒரு தீவிரமான ஒளிச்சுடர் புலனாகியது. உள்ளத்தினுள் குமுறும் பசி அவனைத் தன் கொழுந்து நாக்கினால் நக்கித் தின்பதுபோல் இருந்தது. அவள் உள்ளூற வேதனை அடைந்தாள். 'பாவம்! இவர் உடம்பு நன்றாகவே இல்லை. இவரை விட்டு ஏனோ காசிக்குப் போனோம்' என்றிருந்தது அவளுக்கு. கணவர் இளைத்திருக்கும்போது தான்மட்டும் பருத்திருப்பது கண்டு அவளுக்குத் தன் உடம்பின் மேலேயே வெறுப்பு மூண்டது.

இன்னும் என்ன பேசுவது என்று எண்ணித் தயங்கிய மகேந்திரன் பிறகு, ''சித்தி எப்படி இருக்கிறாள்?'' என்றான்.

இதற்குப் பதில் கிடைத்த பின்னர் இரண்டாவது கேள்வி என்ன என்று தோன்றவில்லை. அருகில் பழைய கிழிந்த பத்திரிகைத் துண்டு ஒன்று கிடந்தது. அதை எடுத்து வேறு ஏதோ நினைவுடன் படிக்கத் தொடங்கினான். ஆசா தலை குனிந்தவாறு எண்ணலானாள்: 'இத்தனை நாட்கள் கழித்துப் பார்த்தாலும், ஏன் இப்படிச் சரியாகப் பேசமாட்டேனென்கிறார்? என் முகத்தைக்கூடச் சரியாகப் பார்க்கவில்லையே? இந்தச் சில நாட்களாகக் கடிதம் எழுதவில்லை என்ற கோபமா? இல்லை, பெரியம்மாவின் பேச்சைக் கேட்டுக் காசியில் அதிக நாட்கள் இருந்ததால் வெறுப்பா?' எவ்வாறு குற்றம் புகுந்து கொண்டது, எந்தக் காரணம் என்று அவள் மனவேதனையுடன் உள்ளத்தினுள் தேடி அலைந்தாள்.

மகேந்திரன் காலேஜிலிருந்து வந்தான். பிற்பகலில் சிற்றுண்டி அருந்தும்போது ராஜலட்சுமி அருகில் இருந்தாள். ஆசாவும் முசுக்கிட்டு, சற்றுத் தொலைவில் கதவைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்தாள். ஆனால் எவரும் பேசவில்லை.

ராஜலட்சுமி கவலையுடன், ''உனக்கு ஏதாவது உடம்பு சரியில்லையா, மகேன்?'' என்றாள்.

மகேந்திரன் வெறுப்புடன், ''இல்லையே! என் உடம்புக்கு என்ன கேடு?'' என்றான்.

''பின் ஏன் சாப்பிடவே இல்லை?''

மீண்டும் முன்போலக் கசந்த குரலில், ''இதோ, சாப் பிட்டுக்கொண்டுதானே இருக்கிறேன்'' என்றான் மகேந்திரன்.

கோடைக் காலத்து அந்தி வேளை. உடம்பில் மெல்லிய துண்டைப் போட்டுக்கொண்டு மகேந்திரன் மாடியின்மேல் குறுக்கும் நெடுக்குமாக உலாவினான். வழக்கமாகப் படிப்பது நின்று விடாது என்று மனப்பூர்வமாக நம்பியிருந்தான் அவன். 'ஆனந்த மடம்' அநேகமாக முடிந்துவிட்டது. இன்னும் மூன்று அத்தியாயங்கள்தான் பாக்கி. விநோதினி எவ்வளவு அழுத்தக்காரியானாலும் இந்தப் பாக்கியைப் படித்துச் சொல்லுவாள் என்று அவன் எண்ணியிருந்தான். ஆனால் அந்திப்பொழுது சாய்ந்தது. நேரமும் ஆகியது. ஏமாற்றம் மனத்தை அழுத்த அவன் படுக்கச் செல்லவேண்டியதாயிற்று.

கூச்சத்துடன் அணிகள் புனைந்து ஆசா மெல்லப் படுக்கை அறையினுள் புகுந்தாள். மகேந்திரன் படுக்கையில் படுத் திருந்தான். இதைக் கண்டதும் எப்படி முன்னேகுவது என்று அவளுக்குப் புரியவில்லை. பிரிவுக்குப் பின் கூடும்போது புது வெட்கம் ஒன்று குறுக்கிடுவது இயல்புதானே! விட்டுச்சென்ற இடத்தைப் பிடித்து ஒட்டிக்கொள்ளும் வரை ஒருத்தர் மற்றவரிடம் புதுமையை எதிர்நோக்கி இருப்பது வழக்கம். அந்த இன்பப் பாயலுக்கு ஆசா அழைக்கப் படாமல் சேருவது எவ்வாறு முடியும்! வாயிலருகில் சற்று நேரம் நின்றாள். ஆனால் மகேந்திரனுடைய குரல் கேட்க வில்லை. மெல்ல அடிமேல் அடிவைத்து முன் சென்றாள். நகைகள் சற்று ஓசை செய்தாலும் நாணிக் குன்றிப் போய்விடுவது போலிருந்தது அவள் நடை. நடுங்கும் கால்களுடன் முன்னேகிய ஆசா, கொசுவலையினருகில் வந்ததும் மகேந்திரன் உறங்குவதைக் கண்டாள். அவள் அணிந்த நகை அவளைச் சுற்றி ஏளனம் செய்வதாக அவளுக்குத் தோன்றியது. மின் வேகத்தில் அங்கிருந்து வெளியே சென்று வேறு எங்காவது படுக்கலாமா என்றிருந்தது அவளுக்கு.

ஆசா, ஓசைப்படாமல் போய்க் கட்டிலில் ஏறிக்

கொண்டாள். அதனால் உண்டான ஓசையினாலும் குலுக்கலினாலும் உண்மையான உறக்கத்தில் இருப்பவன்கூட எழுந்து விட்டிருப்பான். மகேன் தூங்கவில்லை; அதனால் அவன் கண்களைத் திறக்கவில்லை! கட்டிலின் ஓரமாக அவன் ஒருக்களித்துப் படுத்திருந்தான். ஆசா அவனுக்குப் பின்புறம் கிடந்தாள். ஆசா மௌனமாகக் கண்ணீர் வடிப்பதையும் அவனால் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிந்தது. தன் கொடுமையைக் கண்டு உள்ளத்தை எவரோ இடுக்கியால் நசுக்குவதுபோன்ற ஓர் உணர்ச்சி அவனுக்கு மூண்டது. ஆனால் என்ன சொல்வது, எவ்வாறு அவளுக்கு ஆறுதல் சொல்வது என்று அவனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. உள்ளூறத் தன்னை நொந்துகொண்டான். அதனால் உள்ளத்தில் காயம் ஏற்பட்டாலும், வேறு வழியில்லையே! 'விடியலில் தூங்குவதாகப் பாசாங்கு செய்ய முடியாதே! அப்போது அவளிடம் என்ன பேசுவது?' என்று அவன் எண்ணமிடலானான்.

ஆசா தானாகவே அந்தக் கஷ்டத்தை விடுவித்தாள். விடியுமுன்னரே அவள் அவமதிப்படைந்த அணிகளுடன் எழுந்து சென்றாள். அவளாலும் மகேந்திரன் முகத்தில் நேருக்கு நேர் விழிக்க முடியவில்லை.

31

'ஏன் இப்படி? நான் என்ன செய்தேன்?' என்று எண்ணினாள் ஆசா. ஆனால் உண்மையில் குறை இருந்த இடம் அவள் கண்களில் படவில்லை. விநோதினியை மகேந்திரன் நேசிக்கக்கூடும் என்ற ஐயம் அவள் மனத்தில் தோன்றவில்லை. உலகத்தைப்பற்றிய அற்புத அறிவு அவளுக்கு இல்லை. தவிர, மணமானபின் சில நாட்களிலேயே மகேந்திரனைப்பற்றிப் புரிந்துகொண்டாள்; அப்படிப்பட்டவன் மாற முடியும் என்று கற்பனைகூட அவளால் செய்ய முடியவில்லை.

அன்று மகேந்திரன் சீக்கிரமாகவே காலேஜுக்குச் சென்றான். வழக்கமாக அவன் காலேஜுக்குச் செல்லுகையில் ஆசா சாளரத்தின் அருகே வந்து நிற்பாள். மகேந்திரனும் வண்டியிலிருந்து ஒரு முறை நிமிர்ந்து நோக்குவான். இது நீண்ட நாளைய வழக்கம். அதே பழக்கப்படி வண்டியின் ஓசை கேட்டதும் ஆசா யந்திரப் பாவையெனச் சாளரத்தினருகே

வந்து நின்றாள். மகேந்திரனும் வழக்கத்தை யொட்டி, ஒரு முறை சட்டென்று தலை நிமிர்ந்தான். அங்கு ஆசா நின்றிருந்தாள். அவள் அப்போதும் குளிக்கவில்லை. உடலில் அழுக்கு உடை; படியாத கூந்தல்; வாடிய முகம். இவைகளைக் கண்டவுடன் மகேந்திரன் தலை குனிந்து மடியிலிருந்த புத்தகத்தில் கவனம் செலுத்தினான். கண்ணோடு கண் நோக்கு ஒக்கும் அம்மொழி எங்கே? கருத்துப் பொதிந்த அப் புன்னகைதான் எங்கே?

வண்டி சென்றுவிட்டது. ஆசா அங்கேயே தரையில் உட்கார்ந்துவிட்டாள். உலகம், குடும்பம் எல்லாம் அவளுக்கு வெறுத்துவிட்டன. கல்கத்தாவின் அலுவற்கடல் பொங்கும் வேளை அது. மணி பத்தரை ஆகிவிட்டது. ஆபீஸ் செல்லும் வண்டிகளுக்குக் கணக்கில்லை. டிராம்கள் ஒன்றன்பின் ஒன்றாகச் சென்றவண்ணம் இருந்தன. பரபரப்பு, அவசரம், தீவிரம் இவை மலிந்த அந்தச் சூழலிற்கு அருகில் வேதனை கவிந்து வாடும் அந்த உள்ளம் சற்றும் எடுபடவில்லை.

'ஓ! புரிகிறது. விஹாரி பாபு காசிக்கு வந்ததனால்தான் இந்தக் கோபமாக இருக்கும். இதைத் தவிர நடுவில் வெறுப்பூட்டும் நிகழ்ச்சி எதுவுமே நடக்கவில்லையே! அதில் என் தவறுதான் என்ன?' என்று சட்டென்று ஆசாவின் மனத்தில் தோன்றியது.

இவ்வாறு எண்ணுகையில் கண நேரம் அவள் இதயத் துடிப்பே நின்றுவிடும் போல் ஆகிவிட்டது. சட்டென்று அவளுக்கு ஒரு சந்தேகம் உண்டாகியது. ஒருவேளை விஹாரி காசி சென்றதற்கும் தனக்கும் தொடர்பு இருப்பதாக மகேந்திரன் நினைத்தானோ? இருவரும் சேர்ந்துதான் இதைச் செய்வதாக அவன் எண்ணியிருக்கலாம். சீச்சீ! இத்தகைய சந்தேகமா? வெட்கக்கேடு. ஏற்கனவே விஹாரியுடன் அவள் பெயர் பலதடவை கலந்து ஓரளவு அருவருப்புக்கு அடிகோலியிருந்தது. அதற்குமேல் மகேந்திரன் வேறு சந்தேகப்பட்டால், உயிரை வைத்துக்கொண்டு எப்படி இருக்க முடியும்? அப்படியே ஏதாவது சந்தேகம் மூண்டாலும், பிழை ஏற்பட்டிருந்தாலும், மகேந்திரன் ஏன் அவளிடம் தெளிவாகச் சொல்லக் கூடாது? விசாரணை செய்து ஏற்ற தண்டனை கொடுத்தால்தான் தவறென்ன? இவ்வாறு வெளிப்படையாகக் கூறாமல், ஆசாவைத் தட்டிக் கழித்துச் செல்வதன் காரணம் தன்னுடைய சந்தேகம் ஆதாரமற்றது என்று மகேந்திரனுக்கே தெரிந்திருக்கலாம் என்பதுதான். அதனால் தான் அவன் வெளிப்படையாகச் சொல்லக் கூசுகிறான். இல்லாவிட்டால், குற்றவாளிபோல் அவன் முகம் மாறியதேன்?

ரோஷத்துடன் இருந்தால் விசாரணை செய்பவன் இவ்வாறு தயங்குவானா?

வண்டியிலிருந்தபடி மகேந்திரன் கண்ட அவ்வாடிய முகம் அன்றெல்லாம் அவன் மனத்தைவிட்டு அகலவில்லை. காலேஜில் பாடங்களுக்கிடையேயும், வரிசையாய் இருந்த மாணவர்களிடையேயும், சாளரத்தில் கண்ட அவளது வாடிய முகம், குளிக்காததால் பரட்டையான அவள் தலைமயிர், அழுக்கடைந்த அவள் உடை, வேதனை தோய்ந்து மங்கிய அவள் பார்வை - இவையே அடிக்கடி அவன் கண்முன் தோன்றின. காலேஜில் தன் வேலை முடிந்ததும் அவன் ஏரியின் கரையில் உலாவச் சென்றான். பொழுது சாய்ந்துகொண்டே வந்தது. ஆசாவிடம் எவ்வாறு நடந்துகொள்வது என்று அவனுக்கு விளங்கவில்லை. பரிவு காட்டி ஏமாற்றுவதா, அல்லது கடுமையாக உண்மையைத் தெரிவிப்பதா, எது தகுந்தது? விநோதினியைத் துறப்பதா, கூடாதா என்ற பிரச்னை அவன் மனத்தில் எழவே இல்லை. பரிவு, காதல் இரண்டிற்கும் உரிமை கொண்டாட அவனால் எப்படி முடியும்?

கடைசியில் அவன் தன் மனத்தை ஒருவாறு தேற்றிக் கொண்டான். ஆசாவிடம் இன்னமும் தான் காட்டும் பரிவு எத்தனை மனைவியர்க்குக் கிட்டுகிறது இவ்வுலகில்! அந்த அன்பு, அந்தக் காதலைக்கொண்டே ஆசா திருப்தி அடையக் கூடாதா? விநோதினி, ஆசா இருவருக்குமே இடம் அளிக்கத்தக்க வள்ளன்மை அவனுக்கு இருக்கிறது. விநோதினிக்கும் அவனுக்கும் இடையே உள்ள தூய காதலினால் குடும்ப கௌரவத்துக்கு எத்தகைய தடங்கலும் வராது - இவ்வாறு எண்ணி அவன் தன் மனச்சுமையைத் தளர்த்திக்கொண்டான். விநோதினி, ஆசா இருவரில் எவரையும் தள்ளாமல், இரண்டு சந்திரர்கள் சூழ்ந்த கிரகம்போல் தன் வாழ்நாளைக் கழிக்கலாம் என்று எண்ணி அவன் மனம் பூரிப்படைந்தான். அன்றிரவே சீக்கிரமாகப் படுக்கைக்குச் சென்று, அன்பு, ஆதரவு, குளிர்ந்த பேச்சுக்களால் ஆசாவின் மனவேதனையை முற்றும் அகற்றிவிடுவது என்ற உறுதியுடன் அவன் வேகமாக வீட்டுக்கு வந்தான்.

சாப்பிடுகையில் ஆசா வரவில்லை. ஆனால் படுக்கையறைக்கு எப்படியும் வரத்தானே வேண்டும் என்று எண்ணி அவன் படுத்துக்கொண்டான். ஆனால் மோனம் பரவிய அந்த வெற்றுப் படுக்கையில் அவனது உள்ளத்தைக் கவிந்த நினைவு எது? புது மணம் புரிந்துகொண்டு நிதம் புதுமையுடன் கண்ட இன்பமா? இல்லை. கதிரவன் ஒளிக்கு முன் நிலவு போல், அந்தப் பழைய நினைவு இருந்த இடமே தெரியாமல்